விலை: 30.00
பக்கங்கள் - இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 06 வியாழக்கிழமை (18.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 61

## பெரியதம்பனை காட்டுப்பகுதியில் தற்கொலை அங்கிகள் மீட்பு

(வவுனியா)
செட்டிகுளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய தம்பனை காட்டுப் 19

## கொரோனா தொற்றால் 13 பேர் உயிரிழப்பு
### நேற்றும் +722 தொற்றாளர்கள்

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 13 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் 19

## தமிழரின் எழுச்சிப் பேரணி ஒற்றுமை நீடிக்குமா?
### விக்னேஸ்வரனிடம் சுவிஸ் தூதுவர் கேள்வி

(யாழ்ப்பாணம்)
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான தமிழ் மக்களின் எழுச்சிப் பேரணி சகலரையும் ஒன்று சேர்த்தது.
இவ்வாறான ஒற்றுமை வருங்காலத்தில் நிலைக்குமா என நீதியரசர் 19

### சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்பு தொடர்ந்தால்
# சிறுபான்மையினங்களின் ஒற்றுமை நீடிக்கும்
### சுவிஸ் தூதுவரிடம் நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)
ராஜபக்ஷ அரசாங்கத்தின் சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்பு தொடர்ந்தால் சிறுபான்மையினங்களின் ஒற்றுமை நீடிக்கும் என இலங்கைக்கான சுவிற்சலாந்து தூதுவரிடம் நீதியரசர் விக்னேஸ்வரன் எடுத்துரைத்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.பல்கலை மாணவன் உட்பட வடக்கில் நால்வருக்கு கொரோனா

(குப்பிழான்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத் 19

## வெற்றிலை துப்பியபோது தவறிவிழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
வெற்றிலை துப்பும்போது துவிச்சக்கரவண்டியில் இருந்து கீழே 19

## இந்து மதத் தலைவர்களுடன் சுவிஸ் தூதுவர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த சுவிஸ்சர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் டொமினிக் 19



## கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு
### ஊரெழுவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
ஊரெழு மேற்குப் பகுதியில் 19

### பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து
## காரைநகரில் காணி அபகரிப்பு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
காரைநகரில் கடற்படையினரின் தேவைக்காக காணி அபகரிப்பதற் 19

Fun BLASTER இப்போது புதுப்பொழிவுடன்
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
Dialog
எதிர்காலம் இன்றே.
(C-1214)

## மருந்தாளர் தேவை

யாழ். மாவட்டத்திலுள்ள மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் தேவை.

(5819)

☎-076 939 1976

## வேலை வாய்ப்பு

**சூரிய மஹால்**

பிரதான வீதி, பருத்தித்துறையில் இயங்கிவரும் உணவகத்துடன் இயங்கும் திருமண மண்டபத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடத்திற்கு தகுதியான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. **கணக்கீட்டு உதவியாளர்** ( Account Assistant ) அடிப்படை கணக்கீட்டு அறிவுடன் கணினி அறிவும் விரும்பத்தக்கது.
2. **காசாளர் ( CASHIER )** அடிப்படை கணக்கீட்டு அறிவுடன் கிராம சேவையாளரின் நற்சான்றுப் பத்திரம்.

(5814)

**077 704 6623, 077 315 1654**

பிரதான வீதி, பருத்தித்துறை.

## சிறுநீரகம் தேவை

B அல்லது O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

(5819)

**077 690 6613**

## காணி விற்பனைக்கு

செம்மணி வீதியில் நாயன்மார்கட்டு கேணியடியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். ( ஒரு பரப்பின் விலை 5 இலட்சம். )

(5820)

**077 288 0152, 077 505 8561**

## பருத்தித்துறையில் வேலை வாய்ப்பு

பருத்தித்துறையில் புதிதாக அமையவிருக்கும் ஆடையகம் ஒன்றுக்கு ஆடை விற்பனையாளர்கள் ஆண் / பெண் வேலைக்கு அமர்த்தப்படவிருக்கின்றார்கள்

(5813)

**தோழன் ஆடையகம்**

இல. 161, பிரதான வீதி, பருத்தித்துறை.

**077 315 1654 / 077 212 5385**

## NVQ

DMI COMPUTER EDUCATION

TVEC Reg.No.P25/0056

(C-1459)

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை

# ICT - NVQ LEVEL- 5

**Diploma in Information Technology** ( Full Time - 1 Year )

NVQ 5 & 6 குறைந்த கற்கைநெறி கட்டணத்தில் ICT துறையில் குறுகிய காலத்தில் அரச பல்கலைக்கழகபட்டதாரி ஆகும் சந்தர்ப்பம்.

பதிவுகளை பெப்ரவரி 20ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் வடமாகாணத்தில் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 22/2/2021 (Mon) 8.30 am

Call now 0777173517

**ICT - NVQ LEVEL - 4** ( Full Time - 6 Months ) | **CAA - NVQ LEVEL - 3** ( Full Time - 3 Months , Part Time - 6 Months )

**DMI COMPUTER EDUCATION**

No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ஹோல் அருகாமை) 021 222 4403 0777240707

M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470

A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021 228 5655

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**செல்வராசா சதானந்தன்**

( J.P, ஓய்வுநிலை அதிபர், சமூகசேவகர் )

திதி : மாசி மாத பூர்வபட்ச சப்தமி

மாறிடும் வாழ்வினில் மாறாது
உங்கள் நினைவுகள்
ஆண்டுகள் இரண்டென்ன
ஆயிரமானாலும்
அழியாது அப்பா...

தோற்றம் 1940.07.23 மறைவு 2019.03.13

"ஆனந்தபவன்" அல்வாய்.

(C-1460)

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையின் முன்னைநாள் துணைத்தலைவர்

பேராசிரியர்

**நவமணி செல்வராஜா**

அவர்கள் கடந்த 16.02.2021 (செவ்வாய்க்கிழமை) இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெற பிரார்த்திப்போமாக.

(5816)

**தலைவர் மற்றும் ஊழியர்கள்**

விலங்கியல்துறை – விஞ்ஞானபீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## நடேஸ்வரா அன்னையின் கண்ணீர்த் துளிகள்



பாடசாலையின் வளர்ச்சிக்காக புலம்பெயர்ந்த நாட்டில் இருந்து அயராது பணியாற்றிவரும் எமது பாடசாலையின் பழைய மாணவன் திரு. ம. குமரகுலதேவன் அவர்களின் அன்புத் தாயார்.

**அமரர் சரஸ்வதி மகாலிங்கம்**

கனடாவில் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்னை புவனேஸ்வரி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 17.07.1929 மறைவு 15.02.2021

(5811)

பாடசாலைச் சமூகம்

யா/ நடேஸ்வராக் கல்லூரி - காங்கேசன்துறை.

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் சி. பிரதீபன் ((முகாமையாளர், சமுர்த்தி வங்கி, யாழ். நகர்மேற்கு. ), சி. பிரகாசன் (உதவி ஆணையாளர் - பரீட்சைத் திணைக்களம்)) அகியோரின் அன்புத் தாயார்

**சின்னத்தம்பி பாக்கியம்**

மீளாத்துயிலில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ...
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
எங்கள் கண்ணீர் துளிகளைக்
காணிக்கையாக்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் 30.09.1943

விண்ணில் 17.02.2021

பிரிவின் துயரில்...

**நல்லூர் நண்பர்கள்**

(5818)


## B.A பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் இரண்டாம் ஆண்டு (200 Level) பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.
- மூன்றாம் ஆண்டிற்கான (300 Level) பதிவுகளும் பரீட்சை விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டுக்குரிய (100 Level) பதிவினை பதிவு செய்த மாணவர்களுக்கான பாடத் தெரிவுகளும் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
- இவற்றிற்குரிய விரிவுரைகள் ஆரம்பம் - 20.02.2021 காலை 8.00 மணி. பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.

குறிப்பு – முதலாம் ஆண்டு பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புகளும் நடைபெறுகின்றது.

(C-1457)

நிர்வாகி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

☎-021 222 8148

# சீனாவின் ஆதிக்கத்தால் இந்திய, அமெரிக்கப் படைகள் வடக்கு, கிழக்கில் நிலைகொள்ளும் அபாயம்

## சிவாஜி எச்சரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள சீனாவின் ஆதிக்கத்தால், இந்தியா- அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் இலங்கைப் பிராந்தியத்தில் அமைதியின்மை ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



யாழில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர்,

குடாநாட்டில் சீனாவின் ஆதிக்கத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எதிராக இலங்கை தொடர்ந்தும் செயற்பட்டால் நிச்சமாக இங்கேயொரு பாரிய மோதல் வெடிக்கும் எனவும் எச்சரித்துள்ளார்.

ஒருவேளை அமெரிக்கப் படைகளோ, இந்தியப் படைகளோ வடக்கு, கிழக்கில் இறங்கி நிலைகொள்ளாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-33)

# காலாவதியான பொருட்களை மீள் பொதியிட்ட தொழிற்சாலைக்கு சீல்

(கொழும்பு)

பேலியகொட - நுகேபார பிரதேசத்தில் உணவு உற்பத்தி தொழிற்சாலையொன்று தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட காலாவதியான "ஜம்போ பீனட்ஸ்" எனப்படும் சிற்றுண்டி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

காலாவதியான திகதியுடன் காணப்பட்ட ஒரு இலட்சத்து 18 ஆயிரம் ஜம்போ பீனட்ஸ் பக்கட்டுக்கள் இதன் போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காலாவதியான அவற்றை பழைய பக்கட்டுக்களிலிருந்து அகற்றி, புதிய பக்கட்டுக்களில் பொதியிட்டுக் கொண்டிருக்கும் போது பொலிஸார் தொழிற்சாலையை சுற்றி வளைத்துள்ளனர்.

தற்போது குறித்த தொழிற்சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதோடு பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினால் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட சிற்றுண்டியின் பெறுமதி சுமார் 3 கோடியாகும். இது மனிதாபிமானத்தை மீறி செய்யப்படும் குற்றமாக கருதப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் பொது மக்கள் வெவ்வேறு உடல்நல சுகாதார பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்கின்றனர். எனவே இவ்வாறானவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (நி-4)



கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் சுண்டுக்குளி சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள மேற்படி சபையின் அலுவலகத்தில் நடைபெற்றது. (படம்-ரவிசாந்)

# இராணுவ வைத்தியசாலையில் வைத்து தடுப்பூசி ஏற்ற மாட்டோம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மறுப்பு

(கொழும்பு)

இராணுவ வைத்தியசாலையில் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதனை தமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்கவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இந்த விடயம் குறித்து ஊடகமொன்றுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இராணுவத்தின் செயற்பாட்டைத் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனக் குறிப்பிட்ட அவர்,

மேலும் கொவிட் 19 தடுப்பூசியை மாவட்ட ரீதியிலான சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் செலுத்துவதற்கான வசதிகள் உள்ள போதிலும், அதனை இராணுவ வைத்தியசாலையில் செலுத்துவதற்கான காரணம் என்ன? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (நி-4)

# தீவுகளில் மின் உற்பத்தி ஒரு வணிக நடவடிக்கையே

## சீனா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் உள்ள தீவுகளில் மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமை முற்றிலும் ஒரு வணிக நடவடிக்கை என சீனா அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இந்தியாவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் கருத்தை வெளியிட்டுள்ள சீனா, சர்வதேச ஏல நடைமுறைகளுக்கு அமையவே நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், எந்தவொரு நாடாக இருந்தாலும், நிறுவனங்களின் நியாயமான உரிமைகள் மற்றும் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் சீனா தெரிவித்துள்ளது.

இலங்கை பிராந்தியத்தில் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வரை, இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதன் மூலமாக மாத்திரமே, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை மற்றும் நாட்டின் தொடர்ச்சியான அபிவிருத்தி ஆகியவற்றை உறுதி செய்ய முடியும் என சீனா மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை வட பகுதியில் உள்ள 3 தீவுகளை சீனாவுக்கு வழங்கும் திட்டத்தில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சர் உதய கம்மன்பில நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



கெரவலபிட்டியவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது திண்மக்கழிவு மின் உற்பத்தி நிலையம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வினால் நேற்று புதன்கிழமை முற்பகல் திறந்து வைக்கப்பட்டது. கெரவலபிட்டிய திண்ம கழிவு மின் உற்பத்தி நிலையத்தில் நாளொன்றுக்கு 600-800 தொன் நகர திண்மக் கழிவைப் பயன்படுத்தி தேசிய மின் கட்டமைப்பிற்கு 10 மெகா வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்



தோற்றம்
1958
–
11
–
10

மறைவு
2021
–
02
–
17

## லயன் கதிரவேல் கமலேஸ்வரன்

### (ஓய்வுநிலை பிரதம கணக்காளர்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் "சந்திரமகால்" அல்வாய் தெற்கு, வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் கதிரவேல் கமலேஸ்வரன் நேற்று (17.02.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேல் - தவமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தப்பு - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திரவதனாவின் அன்புக் கணவரும் பிறேம் கமல் சந்தரின் (உயர்தர மாணவன், உயிரியல் பிரிவு-யாழ்.பரியோவான் கல்லூரி) பாசமிகு தந்தையாரும் கமலேஸ்வரி, தவனேஸ்வரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), மகேஸ்வரன் (ஆசிரியர் - யா/சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி), ரேவதி, சிவனேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுவந்தீசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் (UK) மற்றும் சந்திரமாலா, காலஞ்சென்ற பிறேமச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சந்திரமகால், வதிரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 4 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வதிரி, அல்வாய் (C-1465) தகவல்: குடும்பத்தினர்

# 'வாத்தி கம்மிங்' அஷ்வின் ஆட்டம்




ரவி அஷ்வின்

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் களத்தடுப்பு செய்தபோது இந்தியாவின் அஷ்வின், 'வாத்தி கம்மிங்' பாடலுக்கு நடிகர் விஜய் போல ஆடி ரசிகர்களை மகிழ்வித்தார்.?

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட், சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது. 4ஆம் நாள் ஆட்டத்தில் களத்தடுப்பு செய்த போது 'வாத்தி கம்மிங்' பாடலுக்கு நடிகர் விஜய் போல ஆடி ரசிகர்களை மகிழ்வித்தார் அஷ்வின்.

ஆட்ட நாயகன் விருது வென்ற இவர் தமிழில் கூறுகையில்,

"எனது 8 வயதில் சேப்பாக்கம் மைதானத்தின் கேலரியில் அமர்ந்து போட்டியை பார்த்துள்ளேன்.

அப்போது இங்கு விளையாட முடியுமா? என்று நினைத்திருக்கிறேன். இப்போட்டி தான் எனக்கு மிகவும் ஸ்பெஷலானது. கொரோனா காலத்திலும் அதிக அளவில் ரசிகர்கள் வந்து உற்சாகப்படுத்தினர். ஆட்ட நாயகன் விருதை ரசிகர்களுக்கு அர்ப்பணிக்கிறேன். என்னை ஒரு ஹீரோவாக உணரவைத்த சென்னை ரசிகர்களுக்கு நன்றி," என்றார்.

#### இரண்டாவது முறை


சென்னை டெஸ்டில் தமிழக வீரர் அஷ்வின், சதம் (106), 8 விக்கெட் (5+3) என, 'சகலதுறை வீரராக' அசத்தினார். இவர், 2ஆவது முறையாக இப்படி சிறப்பாக செயற்பட்டார். ஏற்கெனவே 2011ல் மும்பையில் நடந்த மே.தீவுகளுக்கு எதிரான டெஸ்டில் சதமடித்த (103) இவர், 9 விக்கெட்டுககள் (5+4) சாய்த்திருந்தார்.

#### பத்தாவது முறை

டெஸ்ட் அரங்கில் இங்கிலாந்தின் பென் ஸ்ரோக்ஸை 10ஆவது முறையாக அவுட்டாக்கினார் அஷ்வின். ஏற்கெனவே ஆஸியின் வோர்னரை 10 முறை வெளியேற்றினார். இவர்களை தவிர, இங்கிலாந்தின் அலஸ்ரெயர் குக் (9 முறை), அண்டர்சன் (7), ஆஸி கோவன் (7) ஆகியோரை அதிக முறை ஆட்டமிழக்கச் செய்தார்.

# மரண அறிவித்தல்

## நாராயணசுவாமி மோகனதாஸ்



மாவடி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் தற்போது வட்டு.தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாராணயசுவாமி மோகனதாஸ் நேற்று முன்தினம் (16.02.2021) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாராணயசுவாமி - மனோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - மனோன்மணி தம்பதியரின் மருமகனும் திருமகளின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மனோகரிதேவி (Retired Teacher of Holy Family Convent, Dehiwela), மகேந்திரன் (Retired Teacher), சிறீதரன் (Retired Agriculture Instructor), மனோமகமணி மற்றும் மனோரஞ்சிதமலர் (Retired Staff Nurse), மனோகரன் (சட்டத்தரணி - கொழும்பு), கலாநிதி இரத்தினவதனி (USA) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பகீரதன் (திருகோணமலை), சுசீலா (நியூசிலாந்து), லலிதமனோகரி (Retired Teacher, St.Bridget's Convent, Colombo-7), கெங்காதரன் (USA), திருக்குமார், காலஞ்சென்ற கலைமகள் மற்றும் திருக்கேதீஸ்வரன் (அம்பகாமம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலாநிதி ரமணன் (அவுஸ்திரேலியா), ஜீவனி (USA), கலாவினன், கவினன், ஆதினன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வித்தியாவின் (நியூசிலாந்து) பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (18.02.2021) வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 10.00 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.34, கள்ளி வீதி,
வட்டு. தென்மேற்கு, வட்டுக்கோட்டை. (C-1463) தகவல்: மனைவி மற்றும் குடும்பத்தினர்

## கொரோனா தடுப்பூசி

# அச்சமின்றி பெற்றுக் கொள்ளுங்கள்

## சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே

(கொழும்பு)

**கொரோனா தொற்றை தடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ள அனைவரும் எந்தவித அச்சமும் இன்றி தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.**

தற்பொழுது பயன்படுத்தப்படும் தடுப்பூசியினால் பாதிப்பு ஏற்படுவதாக சமூக ஊடகங்களில் வெளிவரும் தகவல்களினால் அச்சம் கொள்ள வேண்டாம் எனவும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்த தடுப்பூசி திட்டத்திற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களுள் பெரும்பான்மையினர் இந்த தடுப்பூசியை பெற்றுக்கொண்டால்தான் கொரோனா தடுப்புக்கான தமது திட்டத்தை வெற்றிகொள்ள முடியும் என்றும் சிலர் இந்த திட்டத்திற்கு எதிராக தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் முன்னெடுப்பதை தாம் கவனத்தில் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தடுப்பூசியினால் பக்கவிளைவுகள் பெருமளவில் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை. இதுவரை 250,000 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றப்பட்டோர் மத்தியில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தகவல்கள் எதுவும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுவாக இவ்வாறான தடுப்பூசி ஏற்றும்போது சிறியளவிலான பக்கவிளைவு ஏற்படக்கூடும். இது வழமையான ஒன்று. மக்களுள் பெரும்பாலானோர் இந்த தடுப்பூசியை ஏற்றிக்கொண்டால்தான் இத்திட்டத்தை வெற்றிகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

## நீங்காத நினைவுகளுடன் மூன்றாவது ஆண்டினில்...

சிவனருளால் 16 - 04 - 1947



சிவன்தாளில் 18 - 02 - 2018

'அறநெறிக் காவலர்', புகழ்பூத்த சட்டத்தரணி

**அமரர். கந்தையா நீலகண்டன்**

முன்னாள் தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்
முன்னாள் பொதுச் செயலாளர் - இந்து வித்தியாவிருத்திச் சங்கம்
முன்னாள் தலைவர் - திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
முன்னாள் செயலாளர் - மனிதநேய நம்பிக்கை நிதியம்

**முன்செய்த வப்பயனாய் மண்ணிலே யுதித்து**
**பின்செய்த பணிகள் யாவும் நலிந்தோர் – நன்றாக**
**என்றும் வாழ்ந்திட வகைசெய்ய உழைத்திட்டார் – தன்**
**பண்பே அதுவென வாழ்ந்து மறைந்திட்ட காவலரே!**

நீங்காத நினைவுகளுடன்...
அகில இலங்கை இந்துமாமன்றம்
இந்து வித்தியாவிருத்திச் சங்கம்
திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
மனிதநேய நம்பிக்கை நிதியம்.

(c-1212)

# மூன்றாவது ஆண்டு நினைவுகளில் அமரர். கந்தையா நீலகண்டன்



65 வருட அகில இலங்கை இந்துமா மன்றத்தின் சமயப் பணியில் ஒப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கிய இரு பெரும் ஆளுமைகள் நம்மிடையே இன்று இல்லை. ஆண்டுகள் பல கடந்தாலும் மாமன்றத்தின் வளர்ச்சியிலும் தூரநோக்குச் சிந்தனையுடனான திட்டமிடலிலும் அமரர்களான வி.கயிலாசபிள்ளை மற்றும் கந்தையா நீலகண்டன் ஆகியோர் ஆற்றிய பணிகள் என்றும் நினைவுகளை விட்டு நீங்காதவை.

19-02-2017 அன்று கயிலாசபிள்ளை இறைவனடி சேர அன்றிலிருந்து சரியாக ஒரு வருடத்தில் 18-02-2018 அன்று கந்தையா நீலகண்டன் இறைவனடி சேர்ந்தார்கள். அடுத்தடுத்து இரு ஆளுமைகளை மாமன்றம் இழந்தது.

அமரர். கந்தையா நீலகண்டன் இறைபதம்டைந்த மூன்றாவது ஆண்டில் அன்னாரை நினைவுகூர்ந்து பிரார்த்திப்பதுடன் அவர் ஆற்றிய பணிகளை மீட்டிப் பார்க்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

வடமராட்சி மண்ணின் விழுதாக. 1947 ஏப்ரல் 16 ஆம் திகதி மலேசியாவில் பிறந்தார் நீலகண்டன். ஆரம்பக் கல்வியினை கிராமத்துப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியினை உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்து. பின் சட்டக் கல்லூரியில் கால்பதித்தார். தனது சட்டத்துறைக் கல்வியை நிறைவு செய்து பிரபல்யமான "முருகேசு சக குலரட்ண" சட்ட நிறுவனத்தில் இணைந்து பணியாற்றி வந்தார்.

1970 இல் இலங்கை சட்டக் கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின் தலைவர் என்ற வகையிலும் அவரது சொந்த ஊரிலிருந்த தென் கருணையம்பதி இந்து இளைஞர் மன்றப் பேராளர் என்ற வகையிலும் மாமன்றத்தில் முகாமைப் பேராளராக இணைந்து கொண்டார். 28-04-1990 ஆம் ஆண்டு மாமன்றத்தின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அன்று முதல். அன்றைய மாமன்றத் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் மாமன்ற கட்டட அமைப்புப் பணிகளில் உறுதுணையாக இருந்தார். முன்னைநாள் தலைவர் அமரர். வி.கயிலாசபிள்ளையுடன் தனது பொதுச் செயலாளர் பதவியைத் தொடர்ந்ததுடன். 2012 ஆம் ஆண்டில் மாமன்றத் தலைவராகவும் பொறுப்பேற்று மாமன்றத்தின் பணிகளை மேம்படச் செய்தார்.

அன்னார் மாமன்றத்தின் நூல்களை மிக நேர்த்தியாக ஒழுங்கமைத்து வெளியிட்டார் என்பது காலத்திற்கும் மறக்க முடியாத ஒரு பணியாகும். மாமன்றத் தலைமையகக் கட்டடத் திறப்பு விழாவினையொட்டி வெளியிடப்பட்ட "கட்டடப் பூர்த்தி சிறப்புமலர்" மற்றும் 'இந்து ஒளி' ஆன்மிக சஞ்சிகையினை ஒழுங்கமைத்து வெளியிட்டு வந்ததுடன் ஆலயங்களின் மஹோற்சவங்களை முன்னிட்டு இந்து ஒளி சிறப்பிதழ்களையும் மாமன்றத்தின் வழிகாட்டிகளாக விளங்கி மறைந்த வே.பாலசுப்பிரமணியம், வைத்திய கலாநிதி க.வேலாயுதபிள்ளை, வி.கயிலாசபிள்ளை போன்றோரின் நினைவுச் சிறப்பிதழ்களையும் சிறப்பான முறையில் பதிப்பித்தார்.

2007 ஆம் ஆண்டு பொன்விழாவினையொட்டி 895 இற்கு மேற்பட்ட பக்கங்களுடன் நூலாக்கற் குழுவின் துணையுடன் இரண்டு பாகங்களைக் கொண்ட தொகுதியாக "பொன்விழாச் சிறப்பு மலரை" தயாரித்தமையும் 2015 இல் மாமன்றத்தின் வைரவிழாவினை முன்னிட்டு ஆய்வுக்கட்டுரைகள், ஆறு தசாப்த மாமன்ற நினைவுகளின் பதிவுகள், நிழற்படப் பக்கங்களையும் உள்ளடக்கி 1000 இற்கு மேற்பட்ட பக்கங்களுடன் அமைத்து "வைர விழாச் சிறப்பிதழை"த் தயாரித்தமையும் மாமன்ற நூல் வெளியீட்டு வரலாற்றில் மைல் கற்களாகும்.

அமரர்.கந்தையா நீலகண்டனின் பெருமுயற்சியினால் வெளியான பதிப்புகளின் வரிசையில் முக்கியமானவையாகக் கருதப்படுபவை "இந்து மக்களுக்கோர் கையேடு" மற்றும் அதன் ஆங்கில மொழிமாற்றப் பதிப்பான "**A Compendium for Hindus**" என்பவையாகும். இந்நூல்கள் இரண்டும் இலங்கைவாழ் இந்துக்களுக்கு மிகவும் பொக்கிஷமாகத் திகழ்ந்து வருகின்றது.

மாமன்றத்தின் பணிகளை பல்வேறு வடிவங்களில் மக்களுக்கு எடுத்துச் செல்வதில் அமரர்.தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தார். குறிப்பாக போரால் பாதிக்கப்பட்டு அல்லலுற்ற வேளையிலும் அதன் பின்னரும் வன்னி மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள். மருத்துவ உதவி மற்றும் கல்விக்கான புலமைப்பரிசில் உதவி என தம்மாலான அனைத்து உதவிகளையும் சிறப்பாக செயற்படுத்தியவர்.

மலையகத்தை நோக்கியும் இந்துமா மன்றத்தின் பணிகளை விரிவுபடுத்தி மலையக மாணவர்களுக்கும் கல்விக்கான உதவிகளை வழங்கியதுடன் அங்குள்ள ஆசிரியர்களை வளப்படுத்தும் வகையில் கருத்தரங்குகளையும் சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்தார்.

நீலகண்டனின் வினைத்திறனான அர்ப்பணிப்பான சேவையை அரசாங்கத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்கள், உயர் அதிகாரிகள், பல்கலைக்கழக சமூகம் மற்றும் எல்லாத் துறைசார்ந்தவர்களும் அறிந்தவர்களாக இருந்தனர். அமரரை அரசாங்கத்தில் பல உயர் பதவிகளை ஏற்கும்படி அழைப்பு விடுத்த போதும் அவற்றை ஏற்றால், தான் துணிச்சலாகவும் சுதந்திரமாகவும் பாரபட்சமின்றியும் சேவை செய்ய முடியாது என்பதை உணர்ந்து மிகவும் சாதுரியமாக அவற்றை ஏற்காமல் விட்டார்.

ஆதரவற்ற சிறார்களை பராமரிப்பதற்காக இலவச மாணவர் விடுதி என்ற அமரர்.வைத்திய கலாநிதி க.வேலாயுதபிள்ளையின் கனவை நனவாக்க.அமரர். வி.கயிலாசபிள்ளை, திருமதி அ. கயிலாசபிள்ளை ஆகியோருடன் ஒன்றிணைந்து ஒரு விடுதியை அமைத்தார்.

2002 ஆம் ஆண்டு பெண்களுக்கான விடுதி "சக்தி இல்லம்" என்ற பெயரில் அமைக் கப்பெற்று இன்று நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ. மாணவிகள் தங்கிக் கல்வி கற்று வருகின்றனர். அவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களும் கணனி வகுப்புக்களும் ஒழுங்கு செய்து அப்பிள்ளைகளின் கல்வியில் சிறந்த முன்னேற்றம் ஏற்படுவதைக் கண்டு தானும் மகிழ்ந்தார். சக்தி இல்லத்தின் மாணவர்கள் பலர் தமது கல்வியைப் பூர்த்தி செய்து வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் நல்ல பணி நிலைகளில் இருப்பதை என்றும் அக நிறைவுடன் கூறிப் பெருமைப்படுவார்.

இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் ஆளுநர் சபை உறுப்பினராகவும் 1997 இல் நியமிக்கப்பட்டு அப்பதவியில் அவர் காலமாகும் வரை (18-02-2018) இருபத்தியிரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றியுள்ளார். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயற்குழு உறுப்பினராக, செயலாளராக, பெற்றோராக, நலன் விரும்பியாக இருபத்து நான்கு வருடங்களுக்கு மேல் சேவையாற்றினார். கல்லூரியின் தேவைகளை உயர்மட்ட அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைத்தார்.

இரத்மலானையில் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினால் 22 ஏக்கர் காணி சொந்தமாக வாங்கப்பட்டு இரத்மலானை இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. பின்பு நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்ட போது 22 ஏக்கர் காணியும் பாடசாலை கட்டடங்களுடன் அரசினால் கையகப்படுத்தப்பட்டது. சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க 6 ஏக்கர் காணி அரசால் மீள் வழங்கப்பட்டது.

அந்த 6 ஏக்கர் காணியிருந்து. 1.4 ஏக்கர் காணியையும் அதிலிருந்த கட்டடங்களையும் இராணுவ பயன்பாட்டிற்கென அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட வேளை, அவற்றை மீட்கும் பணிகளில் முன்னின்று செயற்பட்டு அக்காணிகளை மீளப்பெற தொடர்ந்து ஒன்றிணைந்து செயற்பட்டார்.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் தலைவராக பதவி வகித்த காலப்பகுதியில் வரலாற்றுப் புகழ்மிகுந்த அவ் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளினை அமரர்.கயிலாசபிள்ளையுடன் உறுதுணையாக இருந்தும் பின்பு தனது தனித்திறனாலும் சிறப்புடன் ஆற்றினார்.

இவை மட்டுமின்றி. சிறுவர் இல்லங்களுக்கான மனிதநேய உதவிகள், வறிய பல்கலைக்கழக மாணவர்களின் முன்னேற்றத்திற்கான உதவிகள், வடக்குக்கிழக்கு மக்கள் போர்க்காலச் சூழலில் பாதிக்கப்பட்ட வேளையில் நல்கிய வாழ்வாதார உதவிகள் எனச் சிறந்ததோர் சமூகத் தொண்டனாகவும் திகழ்ந்தார்.

இந்து மதத்திற்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிராக மட்டுமன்றி நாட்டில் நடைபெறும் பல்வேறு முரண்பாடுகளுக்கு எதிராகவும் துணிவோடு கண்டனம் வெளியிடுவதோடு மட்டும் நின்றுவிடாது. ஆக்கபூர்வமானதொரு முடிவு கிடைக்கும்வரை தன்னை அர்ப்பணித்துப் போராடும் மனவுறுதி கொண்டவராகவும் விளங்கினார்.

அமரர்.நீலகண்டன். ஒரு வேலையாகட்டும் அல்லது ஒரு நிகழ்வாகட்டும், அத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் ஒன்றுபடுத்தி அப்பணியில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொறுப்புக்களை வழங்கி, அவர்களும் தங்கள் ஆளுமைகளை வளர்த்துக் கொள்ள களம் அமைத்துக் கொடுத்தார்.

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் செயற்பாடுகளையும் அமரர்.கந்தையா நீலகண்டனின் சேவை மனப்பாங்கினையும் பிரித்துப் பார்க்க முடியாதளவிற்கு இரண்டும் ஒன்றிப்போயிருந்தன.

அமரரின் தலைமைத்துவப் பண்பினையும் ஆளுமையையும் மனிதநேயத்தையும் ஒருசில பக்கங்களுக்குள் அடக்கி விட முடியாது - எழுத்து வடிவத்தில் எழுதியும் முடியாது. ஆனால் அமரருடன் சேர்ந்து பயணித்த ஒவ்வொரு உள்ளத்திற்கும் அவரது மேன்மை நீங்காத பசுமை நினைவாக இருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

**வே.கந்தசாமி**
**பொதுச் செயலாளர்,**
**அகில இலங்கை**
**இந்துமாமன்றம்.**

# ஒப்பந்த காலம் நிறைவடைந்த விளம்பரப் பதாகைகளை அகற்ற வேண்டும்

## நகரசபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் மேல் விளம்பரப் பதாகைகள் பொருத்துவதற்கு சாவகச்சேரி நகர சபை அனுமதி வழங்கக் கூடாது என சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ம.நடன தேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி சந்தைக் கட்டடத் தொகுதி பாரம்பரிய மான கட்டடம். பல யுத்தங்களைக் கண்டு இழந்து விழும் தறுவாயில் காணப்படுகின்றது.

இந்நிலையில் கட்டடத்தில் விளம்பரப் பதாகைகளைப் பொருத்துவது பாரிய ஆபத்தை ஏற்படுத்தும். தற்போது உரிய ஒப்பந்த காலம் நிறைவடைந்தும் அகற்றப்படாத நிலையில் காணப்படும் விளம்பரப் பதாகைகளை உடனடியாக அகற்ற நகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒப்பந்த காலம் நிறைவடைந்த சகல விளம்பரப் பதாகைகளையும் பாகுபாடு இன்றி அகற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார். (5-4-30)

# வரணி பகுதியில் அதிகரிக்கும் குரங்குத் தொல்லை

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. குறிப்பாக மாசேரி, இடைக்குறிச்சி, வட வரணி, கரம்பைக் குறிச்சி போன்ற கிராமங்களில் குரங்குகள் கூட்டம் கூட்டமாக வந்து தோட்டப் பயிர்களை நாசம் செய்கின்றன.

அது மட்டுமன்றி வீடுகளுக்குள் புகுந்து சமைத்து வைக்கும் உணவுகளையும் உண்ணுகின்றன. இதனால் மக்கள் பெரிதும் அல்லலுறுகின்றனர்.

சிறுவர்கள், பெண்கள் போன்றோரை கடிப்பதற்கும் துரத்துகின்றன. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர். (5-4-6-103)

# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி விசேட வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை மறுதினம் 20.02.2021 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. பூஜை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ்ச் சேவை யில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4-6)

# நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை வடமேற்கு மூத்த பிரஜைகள் நலன்புரிச் சங்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

இதில் தலைவராக ஓய்வு நிலை இராஜதந்திரி ஏ.தர்மகுலசிங்கமும் உப தலைவராக வே.தூயகுமாரனும் செயலாளராக திருமதி.சி.செல்வதியும் உப செயலாளராக க.சிவஞானமும் பொருளாளராக வை.கனகரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும், நிர்வாக உறுப்பினர்களாக க.ஜ.சிவலிங்கம், அ.சிறிஸ்கந்தராஜா, திருமதி. த.கலாவதி, திருமதி. ச.விமலாம்பிகை, திருமதி. நா.பூபதி, திருமதி. பூ.செல்வராணி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5-4)




# அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம்



(குப்பிழான்)

மயிலிட்டி ஆதி மயிலிட்டி எனும் பகுதியில் நிறுவப்பட்டுள்ள சிவபூமி கந்தபுராண ஆச்சிரமத்தில் கடந்த திங்கட்கிழமை சிவபூமி அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்து கொண்டு சிவபூமி கந்தபுராண ஆச்சிரமத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வில் ஆசிரியர், கிராமத்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வாரம் தோறும் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 4.30 மணி முதல் 6 மணி வரை இடம்பெறவுள்ள மேற்படி அறநெறிப் பாடசாலை வகுப்புக்களில் ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரும் பங்குபற்ற முடியும் என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (5-4-18)

# எழுதுமட்டுவாழில் இன்று வயல்வரி அறவீடு

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட விவசாயிகள் 2021 ஆம் ஆண்டிற்கான வயல் வரியை இன்று 18 ஆம் திகதி வியாழக்கிழமை செலுத்த முடியும் என கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

வயலுக்கான வரியை இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா சன சமூக நிலையத்தில் சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் இருந்து வருகை தரும் உத்தியோகத்தர்களிடம் செலுத்த முடியும்.

வரியைச் செலுத்த வரும் விவசாயிகள் 2020 ஆம் ஆண்டிற்கான வரிப் பற்றுச்சீட்டு மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான உரமானிய பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-6-30)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சமூக ஆர்வலர்களான திரு. திருமதி. கு.வி. பஞ்சலிங்கம் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்புடன் பேராசிரியர் கா. குகபாலனின் நெறியாள்கையுடனும் வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி. பொ. ஜமுனாதேவியின் அனுசரணையுடனும் புங்குடுதீவு சங்கத்தாகேணிக் கிராமத்தில், கணவரால் கைவிடப்பட்டு வறுமைக்கோட்டுக்குட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் இரண்டிற்கு தலா 1100000 ரூபாய் செலவில் அமைக்கப்படும் வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இந் நிகழ்வில் பேராசிரியர் கா.குகபாலன், செல்வி பொ. ஜமுனாதேவி, கிராம அலுவலர் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை எண்ணெய் குதங்கள் விரைவில் இலங்கை வசமாகும்

## நம்பிக்கை வெளியிட்டார் அமைச்சர்

(கொழும்பு)

**திருகோணமலையில் உள்ள எண்ணெய் குதங்களை நாட்டுக்கே திருப்பிப் பெற்றுக் கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்றுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

மேலும் இந்த விடயம் தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுடன் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இந்த விடயத்தில் இலங்கை முன்வைத்த அனைத்து நிபந்தனைகளுடனும் இந்திய உயர்ஸ்தானிகர் உடன்பட்டுக்கொண்டதாகவும் 2017 இல் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தாங்கள் வழங்கிய நிபந்தனைகளுக்கு அவர் இணக்கம் தெரிவித்ததாகவும் எரிசக்தி அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.(நி-4)

## ஷானி அபேசேகரவின் பிணை கோரிய திருத்த மனு அடுத்த வாரம் பரிசீலனைக்கு



(கொழும்பு)

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸ் ஆகியோரினால் பிணை திருத்த கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த திருத்தங்கள் அடங்கிய பிணை மனுவை எதிர்வரும் 23 ஆம் திகதி, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை அறிவித்துள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன கைது செய்யப்பட்ட வழக்கில், சாட்சியங்களைச் சோடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஷானி அபேசேகர உள்ளிட்ட இருவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர்கள் பிணையில் விடுதலை செய்யக்கோரி கம்பஹா மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்படபோதும் குறித்த மனுவை விசாரணைக்கு உட்படுத்திய நீதிமன்றம், பிணை கோரிக்கையை நிராகரித்தது.

இந்நிலையிலேயே திருத்தங்கள் அடங்கிய பிணை கோரிக்கையை மேன்முறையீட்டு நீதிமன்றில் ஷானி அபேசேகரவின் சட்டத்தரணி சார்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(நி-4)

## ஒன்பது வளைவு பாலத்திற்கு 100 வருடங்கள் நிறைவு தேசிய உரிமையாக்க நடவடிக்கை




(பதுளை)

பதுளை மற்றும் தெமோதரைக்கு இடைப்பட்ட புகையிரத பாதையில் காணப்படும் ஒன்பது வளைவு பாலத்தை தேசிய உரிமையாக பிரகடனப்படுத்தி, நினைவு முத்திரை ஒன்றையும் வெளியிட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்துள்ளார்.

1921 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த பாலத்திற்கு இவ்வருடம் 2021 ஆம் ஆண்டுடன் 100 வருடங்கள் நிறைவு பெறுகின்றன.

கடல் மட்டத்திலிருந்து 3100 மீற்றர் உயரத்தில் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம் செங்கல் மற்றும் சீமெந்துகள் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். 25 அடி அகலம், 80 அடி உயரம், 300 அடி நீளம் கொண்டதாகக் குறித்த பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இன்றைக்கும் ஒருநாளைக்கு சுமார் 6 தடவைகள் ஒன்பது வளைவு பாலம் ஊடாக புகையிரதப் பயணங்கள் இடம் பெறுகின்றன.

உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை வென்றுள்ள இந்த ஒன்பது வளைவு பாலம் இலங்கையின் பிரதான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகவும் காணப்படுகிறது. (நி-4)


## ரியசக்வலவிடமிருந்தான முச்சக்கரவண்டிகளுக்கு சான்றிதழ் வழங்கும் DPMC

CERTIFIED

ரியசக்வல RIYASAKWALA

(விளம்பர விபரணம்)

புதிய வாகனங்களுக்கான தட்டுப்பாடு காணப்படுவதால் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில் கவனம் குவிந்துள்ளது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் பதிவு செய்யப்பட்ட வாகன விற்பனை நிறுவனமான ரியசக்வல, பதிவுசெய்யப்பட்ட வாகனங்களைக் கொள்வனவு செய்ய, விற்பனை செய்ய அல்லது பரிமாறிக் கொள்ள சிறந்த இடமாக விளங்குகிறது. மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி அல்லது ஏனைய வாகனங்கள் மற்றும் சகல வகையான வாகனங்கள் என பரந்துபட்ட வாகனத் தேவையை ரியசக்வல பூர்த்திசெய்கிறது.

பாரிய வாகனத் தீர்வுகளை வழங்கும் ரியசக்வல தனது பிந்திய முயற்சியாக **DPMC** இனால் சான்றிதழ் வழங்கப்பட்ட முச்சக்கர வண்டிகளை அண்மையில் அறிமுகப்படுத்தியது. இந்த முச்சக்கர வண்டிகள் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி நிபுணர்களால் மேற்பார்வை செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதுடன், மூன்று தசாப்தங்களாக பஜாஜ் உற்பத்திகளுக்கு தனித்துவமான விநியோகஸ்தர்களாகக் காணப்படும் அவர்களின் மதிப்பீட்டுக்கான ஒப்பம் வழங்கப்படும்.

ரியசக்வலவிடமிருந்து **DPMC** சான்றிதழ்படுத்திய முச்சக்கர வண்டிகளை அல்லது ஏனைய வாகனங்களை ஏன் ஒருவர் கொள்வனவு செய்ய வேண்டும் என விளக்கமளித்த டேவிட் பீரிஸ் ஓட்டோ மொபைல்ஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்தின் பொது முகாமையாளர் நளிந்த குருகுலசூரிய கூறுகையில், "பதிவுசெய்யப்பட்ட வாகனங்களைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருடைய மனதிலும் தாம் கொள்வனவு செய்யும் வாகனத்தின் நிலைப்புத் தன்மை மற்றும் தாம் கொடுக்கும் பணத்துக்குப் பெறுமதி உள்ளதா என்ற சந்தேகம் காணப்படும். இடையில் மாற்றம் செய்யப்பட்ட வாகனங்கள் எதனையும் நாம் வழங்குவதில்லையென்பதை ரியசக்வல வாடிக்கையாளர்களுக்கு ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளது.

வாகனங்களின் அவசர விற்பனைக்காக அவை குழப்பமான முறையில் அலங்கரிக்கப்படுவதில்லை என்பதால் ரியசக்வலவின் மதிப்பீடு தனித்துவமானதாகும். குறிப்பிட்ட காலப் பகுதியிலேயே அலங்காரம் செய்கின்றோம். மிகவும் வெளிப்படையான முறையிலேயே நாம் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான பெறுமதியை வழங்குகின்றோம். இறுதி உற்பத்தி சிறந்த தரத்துடன் காணப்படுவதுடன், வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்குப் பொறுப்பானதாக அவை அமையும்" என்றார்.

**DPMC** சான்றிதழ் அளிக்கப்பட்ட முச்சக்கரவண்டி அல்லது ஏனைய வாகனங்களை ரியசக்வலவிடமிருந்து கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு டேவிட் பீரிஸ் குழுமத்தின் ஒரே கூரையின் கீழ் உள்ள லீசிங் நிறுவனமான அசெட்லைன் லீசிங் கம்பனி லிமிடட் மற்றும் அசெட்லைன் இன்ஷூரன்ஸ் புரோக்கர்ஸ் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து லீசிங் மற்றும் காப்புறுதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். சகல ரியசக்வல கிளைகளிலும் இவற்றுக்கான அலுவலகங்களும் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக நாடு முழுவதிலுமுள்ள **DPMC** காட்சியறைகளில் ரியசக்வல அமைந்துள்ளது.

பதிவுசெய்த வாகனங்களைப் பெற்றுக்கொள்வது மற்றும் விற்பனை செய்வதை ரியசக்வல மிகவும் சௌகரியமாக்கியுள்ளது. இலக்கம் 137, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற எமது பிரதான காட்சியறைக்கு விஜயம் செய்து பதிவுசெய்யப்பட்ட சிறந்த வாகனத்தைப் பார்வையிட்டு போட்டியான விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.



**DPMC** சான்றிதழ் வழங்கப்பட்ட முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் அல்லது ஏனைய வாகனங்களை ரியசக்வலவிடமிருந்து கொள்வனவு செய்ய அல்லது மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 011 470 0600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Academic
IELTS General
IELTS Life skills.

#1 rated professional Lecturers
Weekday classess
Weekend Classess
Night Classess
# 100% Student focused.
Registered exam centre

Especially designed lessons for students who are willing to migrate foreign countries

idp IELTS
Register with us for IELTS Exam@ 29,999/=
074 188 7878-021 223 2250
infopearsonicollege@gmail.com (5417)

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, jaffna



JOB வேலை வாய்ப்பு

St John Sri Lanka

அம்புலன்ஸ் சாரதிக்கு விண்ணப்பம் கோரல்

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட அம்புலன்ஸ் சேவைக்கு சாரதிகள் தேவைப்படுகின்றது. இதற்காக விண்ணப்பங்கள் பஸ் சாரதி அனுமதிப் பத்திரம் (A தரம்) வைத்திருத்தல் வேண்டும்.

இதற்கான நேர்முகப் பரீட்சை 21.02.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு 1 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்தில் இடம்பெறும்.

சேவை ஆற்ற விரும்புபவர்கள் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். கொடுப்பனவுகள் நேரில் கலந்து தீர்மானிக்கப்படும்.

செ.செல்வறஞ்ஜன் O,St.J
மாவட்ட ஆணையாளர்,
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், யாழ்.மாவட்டம்.

மாவட்ட தலைமையகம்,
இல.161,1th குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், அவசர சேவை
இல.:-021 321 4444, 071 019 9199 (5805)


### சிறைக்கைதியின் வழிநடத்தலில் போதைப்பொருள் கடத்தல்

(கொழும்பு)

பிலியந்தலை பகுதியில் 3 கிலோகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை கைதி ஒரு வரால் இந்தக் கடத்தல் நடவடிக்கை வழிநடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)


வலம்புரி
021 221 7603, 021 567 1532

# வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(குருமன்காடு)

பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு எதிரான செயற்பாடுகளை குறைக்கும் நோக்கில் சமூக மட்டத்தில் உள்ள மகளிர் சங்கங்களுக்கு விழிப்புணர்வுவை ஏற்படுத்தும் வேலைத் திட்டம் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்விழிப்புணர்வு வேலைத் திட்டம் பண்டாரிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பண்டாரிக்குளம், உக்குளாங்குளம் மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு எதிரான செயற்பாடுகளை தடுக்கும் உத்திகள் எனும் தலைப்பில் தெளிவூட்டப்பட்டது. பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் எதிரான வன்முறை உலகெங்கும் பாரிய அளவிலான பிரச்சினையாகவுள்ளது.

உலகில் மூன்று பெண்களில் ஒருவர் தனது வாழ்நாளில் அடிக்கப்பட்டோ, அல்லது வன்முறைக்கு ஆளாக்கப்பட்டோ துன்புறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு துன்புறுத்துபவர் வழக்கமாக அவருக்குத் தெரிந்தவராகவே உள்ளார். இவ்வாறு தொடரும் வன்முறைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் தொடர்பில் சட்டத்தரணியால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி விதுசினி, அக்சன் எய்ட் நிறுவனத்தின் முகாமையாளர் ரம்சிகா, ஒருங்கிணைப்பாளர் நிப்ரஸ், நிறுவனத்தின் இணைப்பாளர் உட்பட மகளிர் சங்க பிரதிநிதிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (5-4-250)

# தத்தெடுக்கப்பட்டது தச்சடம்பன் கிராமம்

(பனிக்கன்குளம்)



ஒரு வங்கி ஒரு கிராமம் என்ற அடிப்படையில் தத்தெடுக்கும் செயற்றிட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தச்சடம்பன் கிராமத்திற்குரிய செயற்றிட்டத்தை வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் த.அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாங்குளம் சமுதாய சமுர்த்தி அடிப்படை வங்கி குறித்த கிராமத்தை தத்தெடுத்து 11 பயனாளிகளுக்கு வாழ்வாதார கடன் திட்டமாக ஒரு இலட்சம் வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்டத்தில் இயங்கிவரும் பதிவு செய்யப்பட்ட வங்கிகள் ஒரு கிராமத்தை தத்தெடுத்து சகல துறைகளையும் ஒன்றிணைத்து பல்துறைசார் உற்பத்திகளை இனங்கண்டு பொருளாதாரத்தை மேம்படுத்தி பசுமையான கிராமமாக மாற்றும் நோக்கில் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந் நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், பிரதேச செயலாளர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-281)

# அருவி மீனவர் சங்கம் அங்குரார்ப்பணம்

(நெளுக்குளம்)



மன்னார் மடுக்கரை முள்ளித்தோட்டம் பகுதிக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் அங்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போது அப்பகுதி மீனவர்கள் மீன்பிடி இறங்குதுறை இன்றி தாம் பெரும் இன்னல்களுக்கு முகம்கொடுப்பதாக தெரிவித்ததுடன் மீனவர் சங்கம் ஒன்று இல்லாத காரணத்தினால் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து மீனவர்களுக்கு இறங்குதுறை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததுடன் மீனவர் சங்கம் ஒன்றும் உருவாக்கப்பட்டது.

இதன்பிரகாரம் அருவி மீனவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு அதற்கான நிர் வாகத்தெரிவும் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் முன்னிலையில் இடம்பெற்றது. (5-4-299)

# சொகுசு பேருந்து சேவை மீண்டும் ஆரம்பம்

(குருமன்காடு)

கொவிட்- 19 தாக்கத்தையடுத்து வவுனியாவிற்கும், கொழும்புக்கும் இடையிலான குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது நாடு மெல்ல மெல்ல இயல்புக்கு திரும்பியுள்ள நிலையில் பயணிகளின் நன்மை கருதி வவுனியாவுக்கும் கொழும்புக்கும் இடையிலான குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சொகுசு பேருந்தில் பயணிப்பவர்களின் உடல் வெப்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அரசாங்க அறிவுறுத்தலுக்கு அமைவாகவே சேவைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6-299)

# யானைத் தந்தங்களுடன் இருவர் பொலிஸாரால் கைது

(முல்லைத்தீவு)

யானை ஒன்றினை கொன்று அதன் தந்தங்களை தம்வசம் வைத்திருந்த இருவரை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் பற்றி தெரிய வருகையில்,

ஒதியமலை காட்டுப்பகுதியில் யானை ஒன்று கொல்லப்பட்டு தந்தங்கள் பெறப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதையடுத்து கிளிநொச்சியில் அமைந்துள்ள வடமாகாண பிராந்திய வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வட்டார அலுவலக வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் இணைந்து தேடுதல் நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

இத்தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த யானைத் தந்தங்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்த ஒரு சோடி யானைத்தந்தம் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்கள தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (5)

# குளங்களைப் புனரமைப்பதால் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்

(அக்கராயன்)

முல்லைத்தீவின் அம்பலப் பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், பழையமுறிகண்டிக் குளம், ஐயன்கன்குளம் ஆகிய நான்கு குளங்களை அபிவிருத்தி செய்வது இப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் என முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அம்பலப்பெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம் ஆகிய இரு குளங்களுக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயிகள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த பெருமழையின் போது அம்பலப்பெருமாள்குளத்தின் அணைக்கட்டிற்கு கூடுதலான நீர் வரவு காரணமாக ஆபத்தான சூழல் காணப்பட்டது. இப்பகுதியில் 400 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி இதற்கு முக்கிய காரணமாக இருந்தது.

இதன்போது இப்பகுதி விவசாயிகள் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து குளத்தின் அணைக்கட்டினைப் பாதுகாப்பதில் அயராது உழைத்தனர்.

இந்நிலையில் அம்பலப் பெருமாள்குளத்தில் முக்கியமான அபிவிருத்தி வேலைகள் இடம்பெறவுள்ளன. மேற்படி நான்கு குளங்களையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரம் உயரும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது விவசாயிகளினால் கடந்த பத்தாண்டுகளில் அம்பலப்பெருமாள்குளம் புனரமைக்கப்படும் என்று வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் முழுமை பெறவில்லை என வினாக்கள் எழுப்பப்பட்ட போது பதில் அளித்த பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் வேலைகளை பொறுப்பெடுத்த ஒப்பந்தகாரர்கள் சரியான முறையில் செயற்படவில்லை. இதனால் வேலைகளை முழுமையாக முன்னெடுக்க முடியவில்லை. குளங்களின் வேலைகள் சரியான முறையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும். விவசாயிகள் இவ்வேலைகளைப் பார்வையிட்டு குறை நிறைகளை தன்னிடம் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்தார். (5-4-350)



கண்ணகிபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கண்ணகிபுரம் கிராமத்தில் பாடசாலை மாணவர்கள் 120 பேருக்கு 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# இராசிபலன்

18.02.2021
மாசி 06, வியாழக்கிழமை
சஷ்டி காலை 8.21 மணிவரை
பரணி பின்னிரவு 2.40 மணிவரை
சுபநேரம் 8.02.-9.32 மணிவரை
இராகுகாலம் 2.02-3.32 மணிவரை
சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை

வளவன்


**மேஷம்**
குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.


**ரிஷபம்**
சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலையை செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம்.


**மிதுனம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.


**கடகம்**
எண்ணங்கள் எளதில் ஈடேறும் நாள், தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.


**சிம்மம்**
உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.


**கன்னி**
மனதில் இனம்புரியாத் கவலைகள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம், வேலைச்சுமை கூடும் நாள், பிரயாண பயமுண்டு.


**துலாம்**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.


**விருச்சிகம்**
பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், பகைவர்கள் மனம் மாறுவர், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.


**மகரம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


**கும்பம்**
பொன்னான நாள், பக்குவமாகப்பேசி காரியம் சாதித்துக்கொள்வீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், பயணங்களால் பலனுண்டு.


**மீனம்**
குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் கூடும், வாக்கு மேன்மையுண்டு.

பிறர் உரிமையில் எக்காரணம் கொண்டும் தலையிடாதீர்கள்.

# யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தை நல்லாட்சி அரசு குற்றவாளியாக்கியது

## ஜெனிவாவில் சவால்களை வெல்வோம் என்கிறார் மகிந்த



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தோற்றம் பெற்றுள்ள சவால்களை வெற்றி கொள்ள தயாராகவுள்ளோம்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர தடையாக இருந்தவர்கள் இன்று கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப் படுத்துவதற்கும் தடையாக உள்ளார்கள். கொவிட் தாக்கத்தினால் நாட்டின் அபிவிருத்தி பணிகள் ஒருபோதும் இடை நிறுத்தப்படமாட்டாது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் அரசியல் காரணிகளினால் இடைநிறுத்தப்பட்டன. யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் குற்றவாளியாக்கியது. இந்த நெருக்கடிக்கு முகம் கொடுக்க தயாராக உள்ளோம்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கொண்டுவரப்பட்டுள்ள தடுப்பூசி குறித்து எதிர்த்தரப்பினர் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். அன்று யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர தடையாக இருந்தவர்கள் இன்று கொவிட்-19 தாக்கத்தை கட்டுப்படுத்தவும் தடையாக உள்ளார்கள்.

உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட்-19 தாக்கத்தின் ஊடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்றலாம் என எதிர்த்தரப்பினர் முயற்சிப்பது தவறாகும்.

2015 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் நாட்டு மக்களே எம்மை மீண்டும் அரசியலுக்கு அழைத்தார்கள்.

யாருக்கு ஆட்சியதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பார்கள். அரசியல் சூழ்ச்சிகள் இறுதியில் தோல்வியடையும் என தெரிவித்தார். (நி-4)

# இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கவே மக்கள் தனி சிங்கள அரசை தோற்றுவித்தார்கள் நீதியமைச்சர் பதவி விலக வேண்டும்

(கொழும்பு)

நீதியமைச்சர் அலி சப்ரி நாட்டு தலைவர் அல்ல. இவர் வரையறைகளுக்குட்பட்டு செயற்பட வேண்டும். பௌத்த மத உரிமை சட்டங்களில் கைவைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய பெரும்பான்மை மக்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு.

நீதியமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கள் அடிப்படைவாதத்தை தோற்றுவிக்கும் வகையில் உள்ளது. நீதியமைச்சர் பதவியில் இருந்து இவரை நீக்க வேண்டும். இல்லாவிடின் இவராலேயே இந்த அரசாங்கம் பலவீனமடையும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பௌத்த மத உரிமை பாதுகாக்கும் சட்டங்களை நீக்க பெரும்பாலான மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கவே பெரும்பான்மையின மக்கள் தனி சிங்கள அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். ஆகவே நீதியமைச்சர் அலி சப்ரி நாட்டின் தலைவர் என்று நினைத்துக் கொண்டு கருத்துரைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நீதியமைச்சரது கருத்துக்கள் தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவிக்கும் வகையில் உள்ளது. ஆகவே இவரது செயற்பாடு குறித்து ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும். நீதியமைச்சர் பதவியில் இருந்து இவரை விலக்குவது சிறந்ததாகும். இல்லாவிடின் இவரால் வெகு விரைவில் அரசாங்கம் பலவீனமடையும் என்றார். (நி-4)

# ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளருக்கு இலங்கையின் ஜனநாயக தன்மை புரிய வேண்டும்

(கொழும்பு)

ஆளுந்தரப்பில் காணப்படுகின்ற கருத்து முரண்பாடுகள் பரந்தளவில் விவாதத்திற்கு உட்படுத்தப்படுவதன் மூலம் அரசாங்கத்தில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவிக்கின்றோம்.

**இவை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கும்** புரிய வேண்டும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஆளும் கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் இல்லை. நாம் ஆரம்பத்திலிருந்து இரட்டை குடியுரிமையுடையோர் நாட்டில் முக்கிய பதவிகள் வகிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம். இதற்கு தகுந்த இரு காரணிகளையும் நாம் முன்வைத்துள்ளோம்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான எமது கட்சியின் பரிந்துரைகளில் இதுபற்றி நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். இந்தப் பிரச்சினை ஏற்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் இதே நிலைப்பாட்டிலேயே இருந்தோம். எனவே இதனை புதிதாக தோன்றிய பிரச்சினையாகக் கருத வேண்டாம்.


இம்முறை அதிகாரம் தனி கட்சியொன்றுக்கு மாத்திரம் கிடைக்கவில்லை. 15 கட்சிகள் ஒன்றிணைந்த கூட்டணிக்கே அதிகாரம் கிடைத்துள்ளது. நாம் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கின்றோம்.

**இது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு புரிய வேண்டும்** என எண்ணுகின்றோம் எனத் தெரிவித்தார். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## புகழ்ச்சியும் ஒரு போதை



ஒரு ஏரிக்கரையில் இருந்த மாமரத்தின் அடியில், அவ்வழியே சென்ற நரி இளைப்பாற ஒதுங்கியது. அவ்வேளையில் காற்றில் ஒரு மாம்பழம் கீழே விழுந்தது.

அதைச் சுவைத்த நரி, "ஆஹா! பழம் தித்திப்பாக இருக்கிறதே!" என்று மகிழ்ந்து, மரத்தை அண்ணாந்து பார்த்தது. நிறையப் பழங்கள் தொங்கின. மேலும் சில பழங்களைச் சுவைக்க ஆசை எழுந்தது.

மரத்தில் ஒரு காகம் அமர்ந்திருந்தது. நரிக்கு அதன் புத்தி வேலை செய்தது. காகத்தைப் புகழ்ந்து பேசினால் காரியம் சாதித்துக் கொள்ளலாம் என்று கணக்குப் போட்டது.

காகத்தை பார்த்து, "தங்கம் போன்று பொன்னிறமாக இருக்கும் அன்புக் காகமே! நல்ல மயிலின் அழகும், குயிலின் குரலும் கொண்டு விளங்குகிறாயே!" என்று ஏகத்துக்கும் புகழ்ந்து தள்ளியது. இதைக் கேட்ட காகம், "உத்தமமான குலத்தில் பிறந்திருப்பதால் உமக்கு என் அருமை பெருமை எல்லாம் தெரிந்திருக்கிறது.


பாவம்! நடந்து வந்த களைப்பும், அயர்வும் உம் முகத்தில் தெரிகிறது. உம் வயிறு நிறையும்படி நன்கு மாம்பழங்களைப் புசியுங்கள்!" என்று கூறி மாம்பழங்களை கொத்திக் கீழே போட்டது.

நரி, "என்ன நாம் சொல்லிவிட்டோம் மயில் குயில் என்று புகழ்ந்து பேசினோம். அவ்வளவுதானே! அதற்காக நம்மை உத்தமகுலம் என்று புகழ்ந்ததோடு, பசிக்கு பழங்களும் தந்து அமர்க்களப்படுத்தி விட்டதே!" என்று எண்ணியவாறே சுவைத்து மகிழ்ந்தது.

தங்களுக்கு ஏதோ கிடைக்கிறதே என்பதற்காக, தகுதியற்றவர்களைப் புகழ்ந்து பேசுவதை தவிருங்கள்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சிரஞ்சீவி அலெக்சாண்டர்




வழியில் ஜெராசியா என்ற இடத்தை அடைந்தார்கள். இங்கே தங்கி கொஞ்சம் ஓய்வெடுக்கலாம் என்றார் அலெக்சாண்டர்.

படைகள் நிம்மதியாக ஓய்வெடுத்தன. அந்நேரத்தில் அலெக்சாண்டரின் கடற்படைத் தலைவனான நீர்கஸ் வந்து அவரைச் சந்தித்தார்.

கடற்படைகளின் நிலை பற்றி விபரமாகக் கேட்டறிந்து கொண்டார் அலெக்சாண்டர்.

அவரிடம் பேசிய பிறகு அலெக்சாண்டர் புதிய பயணத் திட்டங்களை வகுத்தார்.

படைகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டன. அலெக்சாண்டர் ஒரு பிரிவுக்குத் தலைமை தாங்கினார். நீர்கஸ் (Nearchus) மற்றும் இன்னொரு தளபதியின் கீழ் மற்ற இரண்டு பிரிவுகள். மூன்று பிரிவினரும் வெவ்வேறு திசைகளில் தங்கள் பயணத்தை ஆரம்பித்தனர்.

நீர்கஸ் தலைமையிலான படையை அலெக்சாண்டர் பாரசீக வளைகுடாப் பகுதிக்கு அனுப்பினார். இன்னொரு படையை ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் உருவாகியிருந்த கலகத்தை அடக்குவதற்காக அனுப்பிவைத்தார். மீதமிருந்த படையை பலுசிஸ்தான் வழியாக பாரசீகத்தை அடையும் முயற்சியில் ஈடுபடுத்தினார்.

வழியில் மிகப்பெரிய பாலைவனத்தைக் கடந்தாக வேண்டிய சூழ்நிலை. அதைக் கடப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது. ஆனாலும் ஒருவழியாக பாலைவனத்தைக் கடந்தார் அலெக்சாண்டர்.

கி.மு. 324 இல் ஸூசா நகரை அடைந்தார். அதற்கு முன்பாகவே அலெக்சாண்டர் அனுப்பிய மற்ற இரண்டு படைகளும் தங்களுக்கு இட்ட பணிகளை நிறைவேற்றி விட்டு ஸூசா நகரை அடைந்திருந்தன.

ஏற்கனவே வென்று விட்டுப் போன இடங்களிலெல்லாம் அலெக்சாண்டர் நிறைவேற்ற வேண்டிய நிர்வாகப் பணிகள் காத்திருந்தன.

(தொடரும்)

# போராட்டத்தை ஒடுக்க நினைத்தால் இராணுவம் கடுமையான விளைவுகளை சந்திக்கும்

## மியன்மார் இராணுவத்திற்கு ஐ.நா. பகிரங்க எச்சரிக்கை

(நேபிடாவ்)

**இராணுவ ஆட்சிக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களை மிருகத்தனமாக அடக்குவதற்கு கடுமையான விளைவுகள் இருக்கும் என மியன்மார் இராணுவத்துக்கு ஐ.நா. பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மியன்மாரில் கடந்த முதலாம் திகதி ஜனநாயக ரீதியில் தேர்வு செய்யப்பட்ட ஆட்சியை அந்த நாட்டு இராணுவம் கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.

மேலும் அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி ஜனாதிபதி வின் மைன்ட் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல் தலைவர்களை இராணுவம் கைது செய்து சிறை வைத்தது.

அதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராக மியன்மார் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். தலைநகர் நேபிடாவ், யாங்கூன் மற்றும் மண்டலே நகரங்களில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டம் இராணுவ ஆட்சிக்கு பெரும் தலைவலியாக அமைந்துள்ளதால்



போராட்டத்தை ஒடுக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மியன்மார் இராணுவம் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் பாதுகாப்பு படைகள் தங்களது கடமையை செய்வதற்கு தடையாக இருக்கும் மக்கள் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும் என இராணுவம் எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் இராணுவ ஆட்சிக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களை மிருகத்தனமாக அடக்குவதற்கு கடுமையான விளைவுகள் இருக்கும் என மியன்மார் இராணுவத்துக்கு ஐ.நா. பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-4)

## நான் பணயக் கைதியாக இருக்கின்றேன் டுபாய் ஆட்சியாளரின் மகள்

### வெளியிட்ட வீடியோ

(டுபாய்)

டுபாய் ஆட்சியாளரின் மகள் லத்திபா, பணயக் கைதியாக இருப்பதாகவும் வீடு சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கும் வீடியோ வெளியாகி உள்ளது.

ஐக்கிய அரபு அமீரக துணை ஜனாதிபதியும் பிரதமருமான ஷேக் மொஹமத் பின் ரஷித் அல் மக்தூமின் மகள் ஷீகா லத்திபா சுதந்திரமான வாழ்க்கை ஒன்றை வாழ்வதற்காக டுபாயிலிருந்து கடந்த 2018 ஆம் ஆண்டு தப்பி செல்ல முயன்றதாகக் கூறப்படுகிறது.

ஆனால், அவர் பயணம் செய்த ஆடம்பரப் படகு இந்தியா அருகே தடுத்து நிறுத்தப்பட்டு, அவர் மீண்டும் டுபாய் திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அப்போதில் இருந்தே அவர் பொது வெளியில் காணப்படவில்லை.

இந்நிலையில், லத்திபா தப்பிச் செல்ல முற்பட்டு மீண்டும் டுபாய்க்கு கொண்டு செல்லப்பட்ட ஒரு வருடத்திற்கு பிறகு எடுக்கப்பட்ட வீடியோவில் பேசும் அவர், 'நான் ஒரு பணய க்கைதியாக இங்கே இருக்கிறேன், இந்த வீடு சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது' என்று கூறுகிறார்.

லத்திபாவின் நண்பர்கள், அந்த வீடியோக்களை இப்போது ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பியுள்ளதாக செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (நி-4)

## பேருந்து கால்வாய்க்குள் கவிழ்ந்ததில் 32 பேர் உயிரிழந்தனர்

(டில்லி)

இந்தியாவில் மத்திய பிரதேசத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 32 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வந்துள்ளதாவது,

மத்திய பிரதேச மாநிலத்தில் சிதி என்ற இடத்தில் இருந்து சாட்னா என்ற இடத்திற்கு 54 பயணிகளுடன் பேருந்து சென்றுள்ளது. பாட்னா கிராமம் அருகே சென்ற போது அங்குள்ள கால்வாய் ஒன்றில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து கவிழ்ந்துள்ளது.



இந்த விபத்து குறித்த தகவல் அறிந்ததும் விரைந்து வந்த மீட்புக் குழுவினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 32 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். (நி-4)

## செல்லப் பிராணிகள் விற்பனை நிலையத்தில் தீ நூற்றிற்கு மேற்பட்ட விலங்குகள் பலி




(வோஷிங்டன்)

அமெரிக்காவின், இன்டியானா பொலிஸ் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 100 இற்கும் மேற்பட்ட விலங்குகள் உயிரிழந்துள்ளதாக இன்டியான மாநில தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

'Uncle Bills' என்ற குறித்த விலங்குகள் விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட இந்த தீ விபத்தில் சுமார் 40 நாய்கள், 25 கிளிகள், முயல்கள் மற்றும் பிற விலங்குகள் இறந்துள்ளன.

இவற்றுள் பெரும்பாலான விலங்குகள் தீக்கிரையான துடன், சில விலங்குகள் காப்பாற்றப்பட்டும் உள்ளன. தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (நி-4)

## புதிய தொற்றாளர்கள் எண்ணிக்கை குறைந்தது

### உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

உலகளவில் புதிய கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த வாரம் 16 சதவீதமாக குறைவடைந்து 2.7 மில்லியனாக குறைந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதே கால கட்டத்தில் புதிய இறப்புகளின் எண்ணிக்கை 10 சதவீதமாக குறைந்துள்ளது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையான கடந்த வார தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நேற்று முன்தினம் இரவு வெளியிட்ட தனது வாராந்திர தொற்றுநோயியல் புதுப்பிப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர், டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், புதிய கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக ஐந்தாவது வாரமாக குறைந்து விட்டதாக தெரிவித்தார். (நி-4)

# சுகாதார நடைமுறைகள் மேலும் கடுமையாக்கப்படும்

## அசேல குணவர்த்தன எச்சரிக்கை

**(கொழும்பு) சுகாதார நடைமுறைகளை பின்பற்றப்படாவிட்டால் சட்டங்கள் மேலும் கடுமையாக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது, “கொவிட் வைரஸிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சுகாதாரத் துறை வழங்கிய சுகாதார நடைமுறைகள் குறித்த அறிவுறுத்தல்களை பொதுமக்கள் பின்பற்றாவிட்டால், எதிர்காலத்தில் கடுமையான முடிவுகள் எடுக்கப்படும்.

இதேவேளை கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கையை சுகாதாரத்துறை கட்டுப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. உண்மையாக இந்த வைரஸ் தொற்றினை சுகாதாரத்துறையாலோ அல்லது ஆயுதப்படைகளினாலோ கட்டுப்படுத்த முடியாது.

மேலும் சுகாதாரத் துறையில், 22 மில்லியன் மக்களைப் பராமரிக்க போதுமான ஊழியர்கள் இல்லை. ஆகவே பொது மக்கள்தான் அதனை உணர்ந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

அதாவது கைகழுவுதல், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றுமாறு தயவுசெய்து கேட்டுக் கொள்கிறோம். இல்லாவிடின் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியேற்படலாம்” என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-4)

# இரண்டு அமைச்சுக்களின் விடயதானங்களில் திருத்தம்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றின் விடயதானங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதாவது, சமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவம், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுகள் மற்றும் எஸ்.எம்.சந்திரசேனவுக்கு வழங்கப்பட்டுள்ள காணி அமைச்சு ஆகியவற்றின் விடயதானங்களே திருத்தப்பட்டுள்ளன.

இதன்படி தேசிய பாதுகாப்பு மற்றும் இடர்முகாமைத்துவ அமைச்சிற்கு உரித்தான நிறுவனங்களின் எண்ணிக்கை 18 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு-குடியகல்வு திணைக்களம், பதிவாளர் திணைக்களம், இடர் முகாமைத்துவ மத்திய நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை ஆகியன தேசிய பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. புதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் காணி அமைச்சின் கீழ் 7 நிறுவனங்கள் காணப்படுகின்றன.

இதற்கமைய காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, அளவையியல் படமாக்கல் நிறுவனம், நில அளவைச் சபை, காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், காணி குடியமர்வு திணைக்களம் ஆகியன காணி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வீராப்பு வசனத்தை மறந்து முதல் ஆளாக தடுப்பூசி போட்ட அத்துரலிய ரத்ன தேரர்



(கொழும்பு)

நான் கொரோனா தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள மாட்டேன்” என்று கூறியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நேற்று முன்தினம் முதல் ஆளாக தடுப்பூசியை போட்டுக்கொண்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் இராணுவ மருத்துவமனையில் தொடங்கியது.

இதன் தொடக்க நாளில், 19 எம்.பிக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரும் கலந்துகொண்டு தடுப்பூசியைப் பெற்றிருந்தார்.

எனினும் கடந்த சில நாட்களுக்கு முன் “நான் கொரோனா தடுப்பூசியை போடமாட்டேன். எனக்கு கொரோனா மீது பயம் இல்லை” என்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால் நேற்று முன்தினம் முதல் நாளில் அவர் கொரோனாத் தடுப்பூசியை போட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2233

**பவித்திரா**

அவள் என் வாழ்க்கையில் வந்த பிறகு தான்...!



100 ரூபாய் கண்டோஸ் எல்லாம் இருக்கென்று தெரிஞ்சுகிட்டன்...!

**கலைக்ஸ்**

ஜானகி ஜானகி என்று மெசேக் பண்ணிக்கிட்டு இருந்தானே...



முழுப் பெயரையும் கேட்டா ஜானகிராமன் என்று சொல்றானே நாசமாப் போறவன்...!

**பாபுதரன்**

உங்க பொண்ணுக்கு 30 இலட்சம் செலவு பண்ணி கல்யாணம் பண்ணி வைச்சீங்களே பொண்ணு எப்படி இருக்கா...



மகள் நல்லாத்தான் இருக்கா. மாப்பிள்ளை தான் 50 இலட்சம் தாறன் என்ன காப்பாத்துங்க என்று சொல்றான்...!

**கவிதாயினி**

சிறந்த உடை அலங்காரத்திற்கு ஒஸ்கார் விருது வென்ற நடிகை ஜாக்லின் தூரன்...



விருதை வாங்கும் போது தனக்கு தூண்டோலாக இருந்த வடிவேலுவுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார்

**வரதன்**

இனி 5 பேருக்கு மட்டுமே போர்வேட் செய்ய முடியும் வட்ஸ்அப் அறிவிப்பு...




5 பேருக்கு தானா... 10 பேருக்கு அனுப்பினாதானே நல்லது நடக்கும்...!

**குயினா**

மாதா, பிதா, கூகுள் தெய்வம்... ஏண்டா கூகுள் எண்டு சொல்ற குரு தானடா வரும்



எது தெரியல என்றாலும் கூகுள் கிட்ட தானே கேட்கிறறோம் அப்ப கூகுள் தானே குரு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கான அனுமதிப்பத்திர விநியோகம் ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தபால்மூலம் நேற்று புதன்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் ஸ்ரீஜெயவர்தனபுர கல்வி வலயங்களின் பாடசாலை அதிபர்கள், பரீட்சைகள் திணைக்களத்துக்கு வருகை தந்து அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பி.பூஜித தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்களும் தபால்மூலம் அனுப்பப்படவுள்ளன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகி 4 ஆயிரத்து 513 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

இம்முறை நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் 6 இலட்சத்து 22 ஆயிரத்து 352 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# புதிய வகை கொரோனா தொற்றினால் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க நேரும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**புதிய கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்து நடவடிக்கை முன்னெடுப்பது அவசியமாகுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹரித அலுத்கே இவ்வாறு தெரிவித்தார்.



இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 'நாட்டில் தற்போதைய நிலையில் புதிய கொரோனா வைரஸ் தொற்றினால் ஏதேனும் அவதானம் மிக்க நிலைமை காணப்படுமாக இருந்தால் அது குறித்து ஆராய்ந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.


குறித்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான யோசனைகளை தொற்றுநோய் தடுப்பு பிரிவு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், அதனைமையமாகக் கொண்டு அதிகாரிகளுக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் புதிய வகை கொரோனாத் தொற்று குறித்து அதிக கவனம் செலுத்தப்படாத பட்சத்தில் எதிர்காலத்தில் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதும் கூட தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

எனவே, அதனூடாக எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்



(கொழும்பு)

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் உண்மைத் தன்மையினை அரசாங்கம் பகிரங்கப்படுத்தும் என்று கருதியே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையினை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்.

பொதுபல சேனா அமைப்பினை தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படும் செய்தியின் உண்மை தன்மையினை தெரிந்து கொள்ளும் உரிமை எமக்குண்டு என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையினை ஜனாதிபதியிடம் மாத்திரம் சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கை பிரதமருக்கும், பாராளுமன்றத்துக்கும் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால் அறிக்கை குறித்து சமூகத்தின் மத்தியில் மாறுபட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பிலான அறிக்கையை அறிந்து கொள்ள நாட்டு மக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளார்கள். அறிக்கையின் உண்மைத் தன்மையினை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் பொறுப்பு அரச தலைவருக்கு உண்டு. பாதுகாக்கப்பட வேண்டிய இரகசிய தகவல்களை தவிர்த்து ஏனையவற்றை வெளிப்படுத்துவது அவசியமாகும் என ஞானசாரதேரர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## கடவுச் சீட்டு

இந்த உலகமே எனக்குச் சொந்தம். இப்படிச் சொல்வது விசாலமான மனதைக் காட்டுகின்றது உண்மை தான். இருந்தாலும் நடைமுறையில் அதிலே கொஞ்சம் சிக்கல் உண்டு.

இப்பொழுது ஒரு நாட்டிலேயிருந்து இன்னொரு நாட்டுக்குப் போகவேண்டும். எங்களை நினைத்தவுடனே யாருடைய அனுமதியும் இல்லாமல் போய்விட்டு வந்திட முடியுமா? எங்கள் நாடு நீ போகலாம் என்று சொல்ல வேண்டும். இன்னொரு நாடு நீ வரலாம் என்று சொல்ல வேண்டும்.பின்பு தான் பிரயாணத்தையே ஆரம்பிக்க முடியும்.எங்கள் நாடு நீ போகலாம் என்று சொல்கின்றது பாருங்கள். அதுதான் கடவுச் சீட்டு. அந்த நாடு நீ வரலாம் என்று சொல்ல வேண்டும்.

அந்த நாடு நீ வரலாம் என்று சொல்கின்றது பாருங்கள் அது தான் விசா..

அந்தக் காலத்திலேயெல்லாம் ஒரு தேசத்து ராஜாவின் தூதர்கள் அல்லது அதிகாரிகள் இன்னொரு தேசத்துக்குப் போகின்றார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த சமயத்திலே அரசனிடம் இருந்து நன்னடத்தைக் காகிதம் அல்லது முத்திரை மோதிரம் வாங்கிக் கொண்டு போவது வழக்கம். பேரஸ்.. என்னும் புல் இதழ்கள் மேலே இந்தச் சான்றிதழ்கள் எழுதப்படும்.அதிலே ராஜ முத்திரைகள் இடப்படும். அதை எடுத்துக் கொண்டு போகவேண்டும்.

அப்பொழுதெல்லாம் வெளிநாடு போவது என்பது விதியோடு விளையாடுவது மாதிரி. எப்பொழுது போய் சேருவார்கள் எப்பொழுது வந்து சேருவார்கள்.. பத்திரமாக வருவார்களா.ஒன்றும் தெரியாது.

இப்பொழுதெல்லாம் காலையில் போய்விட்டு மாலை திரும்பி வந்து விடுகின்றார்கள்.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ரோமாபுரி மன்னன் அகஸ்டஸ் சீஸர். அவன் கொடுத்த பாஸ்போர்டிலே உள்ள வாசகம் என்ன தெரியுமா? இதைக் கொண்டு வருகின்ற பயணிக்கு, பூமியிலே, கடலிலே எவனாவது துன்பம் செய்விக்க முடிவுசெய்தால் அப்படிச் செய்யும் முன் சீஸரை எதிர்த்துப் போரிடும் அளவுக்குத் தனக்குப் பலம் இருக்கின்றதா என்பதை யோசிப்பானாக. இது தான் அந்த வாசகம்.

அதற்குப் பின் 1780 இலே தான் முதன் முதலில் அமெரிக்கப் பாஸ்போர்ட் வழங்கப்பட்டதாம். 1780 ஜுலை 7 ஆம் திகதி. அதிலே காணப்படுகின்ற வாசகம் என்ன தெரியுமா?

சட்ட சம்பந்தமான காரியங்களுக்காக வெளிநாடுகளுக்கு விஜயம் செய்ய விரும்பும் அமெரிக்க ஐக்கியநாடுகளின் பிரஜை என்று எழுதியிருக்கிறது. அப்பொழுது அரசுச் செயலாளராக இருந்த தாமஸ் பிக்கரிங் அதிலே கையெழுத்துப் போட்டிருக்கின்றார்.ஆதிகாலத்து அமெரிக்கப் பாஸ்போர்ட்களிலே அதை எடுத்துக் கொண்டு வருகின்ற ஆசாமி பற்றிய வர்ணனைகளும் இருக்குமாம்.

1914 ஆம் ஆண்டிலே தான் முதல் தடவையாக புகைப்படம் இணைக்கின்ற பழக்கம் உண்டாகியது. நல்ல பாஸ்போர்ட் ஆரம்பமான கதை இது.

கள்ள பாஸ்போர்ட் ஆரம்பமான கதை தெரியுமா? இரண்டாவது உலக மகாயுத்தம். அதற்குச் சில ஆண்டுகள் முன்னால் அது ஆரம்பமாகி விட்டது.ஜேர்மனியிலே ஹிட்லர் தோன்றினார். யூதர்களை விரட்டினார். ஜேர்மனியில் இருந்து மட்டுமல்ல ஐரோப்பாவிலேயிருந்தே விரட்டினார். அவர்கள் பாஸ்போர்ட் எல்லாம் பறிமுதல் செய்தார்கள். சித்திரவதைக் கூடங்களுக்குக் கொண்டு வந்து போனார்கள். தப்பித்தவர்கள் ஐரோப்பாவிலே நாடு நாடாக அலைந்தார்கள்.

அவர்கள் கையிலே பாஸ்போட் இருந்தால் பயமில்லாமல் வாழலாம். இதனால் கள்ள பாஸ்போர்ட் வியாபாரம் ஆரம்பமாகியது.

இறந்து போன அல்லது காணாமல்போன ஜேர்மன், ஆஸ்திரிய பிரெஞ்ச் படைவீரர்களின் பாஸ்போர்ட்களை திருடிக் கொண்டு வந்து கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்க ஆரம்பித்துவிட்டார்களாம்.

ஏராளமான அகதிகள் இறந்துபோன படைவீரர்கள் பெயரிலேயே வாழ்ந்தாங்களாம். அவர்களை மாதிரியே முடிவெட்டிக் கொண்டார்களாம்.

படைவீரர்களைக் கடத்திக் கொண்டு போய் கொன்று புதைத்துவிட்டு அவர்களுடைய பாஸ்போர்டுகளை கொண்டு வரும் கும்பல்கள் கூட இருந்துதாம்.இந்தக் காலத்திலேயும் பொய்யான பெயரிலே சுற்றுகின்றவர் உலகம் முழுவதும் உண்டு. மாட்டிக் கொள்ளும் போது தான் உண்மை வெளியில் வருகின்றது.

ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்குள்ளே அடிவைக்கிறதில் இவ்வளவு சிரமம் இருக்கு. எங்கள் ஊருக்குள்ளேயே ஒரு பஸ்சுக்குள்ளேயே அடி வைக்கிறதிலே கூட எவ்வளவு சிரமம் இருக்கு தெரியுமா?

ஒரு டவுன்பஸ்.. உள்ளே ஏகப்பட்ட கூட்டம். அதற்குள்ளே நுழையிறதற்கு நிறைய நேரமாக ஒருத்தர் முயற்சி செய்து கொண்டிருந்தார். உள்ளே நின்று கொண்டிருந்த ஒருத்தர் கத்தினார்.ஏன்யா இப்படி முண்டியடித்துக் கொண்டு கிடக்கின்றாய். அடுத்த பஸ்ஸிலே வந்தால் நீ போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர முடியாதா என்றார்.

நான் போய்ச் சேரமுடியும். ஆனால் நீங்கள் போய்ச் சேர முடியாது என்றார். என்னய்யா சொல்கின்றாய்? என்றார் அவர் எரிச்சலோடு. இவர் நிதானமாக சொன்னார். நான் தாங்க இந்த பஸ் டிரைவர் என்றார்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

08

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



(இதுவரை நடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் 5 முறை மட்டுமே மக்களின் நேரடி வாக்குகளைக் குறைவாகப் பெற்றவர்கள் ஜனாதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்).

மேலும், இந்தத் தேர்வு செய்வோர் அவை அமைப்பு முறை சிறிய மாநில அரசுகளுக்கும் அங்கீகாரம் அளிக்கிறது. இதன் மூலம் அமெரிக்க அரசியலமைப்பின் மதிப்பு சமநிலைப்படுத்தப்படுகிறது. மேலும், இந்தத் தேர்தல் அவை அமைப்பு, ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவதற்கு நாடு தழுவிய அளவில், அனைத்து இடங்களிலும் வாக்குகளைப் பெற வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறது.

**தேர்வு செய்வோர் அவை அமைப்பு முறை சிறிய மாநில அரசுகளுக்கும் அங்கீகாரம் அளிக்கிறது. இதன்மூலம் அமெரிக்க அரசியலமைப்பின் மதிப்பு சமநிலைப்படுத்தப்படுகிறது. மேலும், இந்தத் தேர்தல் அவை அமைப்பு, ஒரு வேட்பாளர் நாடு தழுவிய அளவில், அனைத்து இடங்களிலும் வாக்குகளைப் பெற வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறது.**


ஒவ்வொரு மாநிலமும் அதன் மக்கள் தொகையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் (Electoral College) பிரதிநிதித்துவத்தைப் பெறுகின்றன. உதாரணமாக, மிக அதிக மக்கள் தொகையைக் கொண்ட கலிபோர்னியா மாநிலத்துக்கு 55 தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் (இவர்களை மாநிலப் பிரதிநிதிகள் என்றும் அழைப்பர்) உண்டு. அதேபோல மிகச்சிறிய மாநிலமான வெர்மாண்ட் மாநிலத்துக்கு 3 உறுப்பினர்கள்தான்.

மேலும் மாநிலங்கள் அமைக்கப்படாது நேரடியாகக் கூட்டரசால் நிர்வகிக்கப்படும் அமெரிக்க ஆட்சிப் பகுதிகளுக்கு இந்த வாக்காளர் குழுவில் உறுப்பினர்கள் இல்லை. ஆனாலும் கூட்டரசின் கீழுள்ள வோஷிங்டன் டி.சிக்கு (District of Columbia) மட்டும் 3 உறுப்பினர்கள் உள்ளனர்.

இதில் ஒரு ஆச்சரியமான சுவாரஷ்யம் என்னவெனில் 50 இல் 48 மாநிலங்களில் மாநில வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவருக்கு, அந்த மாநிலத்தின் எல்லா அவை உறுப்பினர் இடங்களையும் தந்துவிடுகின்றன. இதற்கு "Winner takes all" என்று பெயர். (மாநிலத்தில் அதிக வாக்குகள் வென்றவருக்கு அந்த மாநிலத்தின் அனைத்து Electoral College இடங்களையும் வழங்குவது.)

இதில் விதிவிலக்காக மெயின் மற்றும் நெப்ராஸ்கா மாநிலங்கள் உள்ளன. இவை இரண்டும் தங்கள் மாநிலத் தேர்தலில் எந்தத் தொகுதியில் எந்தக் கட்சி ஜெயிக்கிறதோ,அதைப் பொறுத்தும் விகிதாசார முறையிலும் அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுபவருக்கு Electoral College இடங்களை அளிக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிக்கும்போது, மாநில அளவில் மட்டும்தான் மக்களின் வாக்குகள் உபயோகமாகின்றன. அதாவது, மக்கள் வசிக்கும் வாக்களிக்கும் மாநிலத்தில் வெற்றி பெறப்போவது யாரென்று அறிய மட்டும்தான் இந்த வாக்குகள் பயன்படும்.

இதன் பொருள் மக்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளருக்கு வாக்களிக்கும் போது, அவர்கள் ஒரு தேசிய போட்டியை விட மாநில அளவிலான போட்டியில் வாக்களிக்கின்றனர். மேலும், ஜனாதிப்தி வெற்றியாளர் தேசிய அளவில் அதிக வாக்குகளைப் பெறும் வேட்பாளர் அல்ல. அதிக Electoral College வாக்குகளைப் பெறுபவரே ஆகும்.




**அமெரிக்க பாராளுமன்ற அவைகளில் கூட்டுக் கூட்டம் நடந்தபோது கலவரக்காரர்கள் அவை ஜன்னல் கண்ணாடிகளை உடைத்ததால் அவர்களை நோக்கி துப்பாக்கியைத் திருப்பிய அதிகாரிகள்.**

தேசிய அளவில் மொத்தம் 538 Electoral College இடங்கள் உள்ளன. இந்த Electoral College வாக்குகளை வெல்ல ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 538 இல் 270 அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களை வென்றவர் ஜனாதிபதி ஆகிறார்.

### இரண்டு வேட்பாளர்களும் பெரும்பான்மை பெறாவிட்டால் அல்லது சமனாக 269 வாக்குகள் பெற்றால் என்ன நடக்கும்?

1804 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தின் 12 ஆவது திருத்தத்தின் படி, எந்தவொரு வேட்பாளரும் Electoral College இல் பெரும்பான்மை பெறாவிட்டால் அல்லது இரண்டு வேட்பாளர்களும் 269 வாக்குகள் பெற்று சமநிலை பெற்றால் (இதற்கு வாய்ப்பு அதிகம் இல்லை என்றாலும் இப்படி நடந்தால்) பிரதிநிதிகள் சபையின் மாநிலக் குழுக்கள் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும்.

அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உள்ளன. ஒரு மாநிலத்திற்கு ஒரு குழு. எனவே, 26 குழுக்களின் (அல்லது மேல்) ஆதரவைப்பெற்றவர், ஜனாதிபதி பதவிக்கு வருவார்.

பாராளுமன்றத்தின் இன்னொரு அவையான செனட் சபையில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். தனிநபர் வாக்குகளைப் பெற்றுள்ள செனட்டர்களைக் கொண்ட செனட்சபை துணை ஜனாதிபதியைத் தேர்வு செய்யும். இவர்களில் பெரும்பான்மை ஆதரவைப் (51 இற்கு மேல்) பெறுபவர் துணை ஜனாதிபதி ஆவார்.

**1804 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்தின் 12 ஆவது திருத்தத்தின்படி, எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் தேர்வு செய்வோர் அவையில் (Electoral College இல்) பெரும்பான்மை பெறாவிட்டால் பிரதிநிதிகள் சபையின் மாநிலக் குழுக்கள் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும்.**

இது அபூர்வமான சூழ்நிலை தான். ஆனால், முன்பு ஒரு முறை இப்படி நடந்துள்ளது. 1824 ஆம் ஆண்டில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜான் குவின்சி ஆடம்ஸ் இந்த முறையில் தான் வெள்ளை மாளிகையில் நுழைந்தார். 1824 ஆண்டுத் தேர்தலில் நான்கு வேட்பாளர்களும் தேர்வாளர் வாக்குகளை பிரித்துக் கொள்ள, யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.



**ஜான் குயின்ஸி ஆடம்ஸ் அரசியலமைபின் 12 ஆவது திருத்தத்தின் படி தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு ஜனாதிபதி**

ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஆன்ட்ரு ஜேக்சன் கூடுதலான மக்களின் நேரடி வாக்குகளைப் பெற்றதால், அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 12 ஆவது திருத்தத்தின்படி இரண்டாவது இடம் பெற்ற ஜான் குயின்ஸி ஆடம்ஸ் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேலும் நாடு முழுவதிலும் பதிவான வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று, அதேசமயத்தில் சில மாநிலங்களில் தோற்றதன் மூலம், இந்தத் தேர்வு செய்வோர் அவை வாக்குகளில் தேவைப்படும் 270 வாக்குகளைப் பெற முடியாமல் போனால், வெற்றி வாய்ப்பை இழக்க நேரிடுகிறது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்கள் வரலாற்றில் இவ்வாறு 5 முறை இடம் பெற்றுள்ளது.

### அதிக மக்கள் வாக்குகள் கிடைத்தும் தேர்வு செய்வோர் அவையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற முடியாமல் தோல்வியுற்ற அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் யார்?

தேர்வு செய்வோர் அவையின் பெரும்பான்மை வாக்குகளை பெற முடியாமல் தோல்வியுற்ற அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவருமே, ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். இவர்களுக்கு அதிக மக்கள் வாக்குகள் கிடைத்தும் தேர்வு செய்வோர் அவையில் பெரும்பான்மை கிடைக்காமல், வாய்ப்புகளைத் தவறவிட்டு இருக்கிறார்கள். அவர்கள் (1) ஆண்ட்ரூ ஜாக்சன் 1824, (2) சாமுவேல் டில்டென் 1876, (3) க்ரோவர் க்ளீவ்லாண்ட் 1888, (4) அல் கோர் 2000, (5) ஹிலாரி கிளின்டன் 2016.

(தொடரும்...)

## கருவாடுகளை இறக்குமதி செய்வதற்கான தடையை நீக்குமாறு மீனவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கருவாடு உள்ளிட்ட உலர்ந்த மீன்களுக் காக விதிக்கப்பட்டுள்ள இறக்கு மதி தடையை நீக்குவதற்கான கலந்துரையாடல்களை மேற் கொள்ளுமாறு இந்திய மத்திய அரசாங்கத்திடம் அந்த நாட் டின் மீனவர்கள் கோரியுள்ள னர்.

இந்தத் தடையால் 15,000 மெற்றிக் தொன் உலர்ந்த மீன்கள் களஞ்சியசாலைகளில் தேங்கியிருப்பது குறித்து மீன வர் கள் கவலை தெரிவித்துள்ளதாக த இந்து செய்திவெளியிட்டுள்ளது.

இதனால் தமிழக மீனவர் கள் பெரும் பாதிப்புக்கு உள்ளா கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகி றது.

அத்துடன் சில ஏற்றுமதியா ளர்களும் வங்கிகளுடன் தங் கள் நிதி நடவடிக்கைகளை தொடர முடியவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இந்திய மத்திய அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டு இலங்கையில் உலர்ந்த மீன்களுக்காக விதிக் கப்பட்டுள்ள தடையினை நீக்கு வது குறித்து கலந்துரையாடி தீர்வை பெற்றுத்தருமாறு இந் திய மீனவர்கள் கோரியுள்ள தாக த இந்து செய்தி தெரிவித் துள்ளது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி



## மங்களம் தரும் மலர்கள்

(தொடர்ச்சி)

திருமாலுக்கு தாமரை தவிர போல பவளமல்லி, சாமந்தி ஆகிய மலர்களும் மிகவும் பிடித்தமானதாகும். சிவபெருமா னுக்கு மிகவும் பிடித்தமானது நாகலி ங்கப்பூவும் வில்வமுமாகும்.

முருகப்பெருமானுக்கு கடம்ப மலர், குறிஞ்சிப் பூ, செவ்வலரி பூ ஆகிய பூக் கள் மிகவும் விருப்பமானவை என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டு ள்ளது.

விநாயகருக்கு எருக்கம்பூ, தும்பை, செம்பருத்தி, தாமரை, ரோஜா மலர்கள் மிகவும் பிடித்தமானது.

அம்மனுக்கு செவ்வலரி, மல்லிகை மிகவும் உகந்தது. இப்படி ஒவ்வொரு கடவுளுக்கும் பிடித்த பூ எது என்பதை அறிந்து கொண்டு படைக்க வேண்டும். அதுதான் இறை அருளை முழுமையா கப் பெற உதவும்.

இறைவனுக்கு பிடித்தம் இல்லாத விரு ப்பம் இல்லாத பூக்களை ஒருபோதும் படைக்கக் கூடாது. எனவே எந்தெந்தத் தெய்வத்துக்கு எந்தெந்தப் பூக்கள் பிடிக் காது என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அட்சதை வெள்ளெருக்கு, ஊமத்தை ஆகியவை பெருமாளுக்குப் பிடிக்காது. செம்பரத்தை, தாழம்பூ, குடஜமம், ஜபா புஷ்பம் ஆகியவை சிவபெருமானுக்கு ஆகாதவையாகும்.

மந்தாரம், அறுகு வெள்ளெருக்கு ஆகியவை அம்மனுக்குப் படைக்க உகந் தது அல்ல. சூரிய வழிபாடு செய்யும் போது மறந்து கூட வில்வத்தைப் படை த்து விடக்கூடாது. அதுபோல விநாயகரு க்கு துளசி ஆகாது. பவளமல்லி சரஸ் வதி தேவிக்குப் பிடிக்காத பூவாகும்.

சில பூக்களை எந்தச் சாமிக்கும் எப் போதும் பயன்படுத்தக் கூடாது என்று விதி உள்ளது. உதாரணத்துக்கு சாமந்திப் பூவில் ஒருவகையைச் சாமிக்குப் படை க்கக்கூடாது.

அதுபோல வானகமலர், மாதுளை மலர், பூசணிப்பூ, மலை ஆலமரப்பூ, பொன் னாங்கண்ணிப் பூ, விளாபுளி பூ, குமி ழம் பூ, குடுகத்தி பூ ஆகிய பூக்களைக் பூஜைக்கு ஒருபோதும் பயன்படுத்தவே கூடாது. பூஜைக்கு விலக்கப்பட்ட இந் தப் பூக்களை சில ஊர்களில் ஆலயப் பிர கார அலங்காரத்துக்கு மட்டும் பயன்ப டுத்திக் கொள்கிறார்கள். கடம்ப மலர், ஊமத்தை பூக்களை இரவு பூஜைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். தாழம் பூவை அர்த்தசாம பூஜைக்கு மட்டுமே பயன்படுத்துவார்கள். பகலில் தாழம் பூவைப் பயன்படுத்தக் கூடாது. (உத்தர கோசமங்கை தலத்தில் மட்டும் விதி வில க்காகப் பகலில் தாழம்பூ பயன்படுத் துகிறார்கள்).

பூக்களின் நிறத்துக்கும் வழிபாட்டுக் கும் கூட தொடர்பு உள்ளது. வெண்மை நிறம் கொண்ட பூக்களை அர்ச்சித்து வழிபட்டால் முக்தி உண்டாகும். சிவப்பு வர்ண பூக்கள் வழிபாடு இன்பத்தைத் தரும்.

மஞ்சள் வண்ணப் பூக்களை இறைவ னுக்குப் படைத்தால் எடுத்த காரியங் களில் வெற்றி உண்டாகும். குடும்பத் தில் அமைதியும் செல்வமும் விருத்தி ஏற்படும்.

பொதுவாக அன்று பறித்த மலர் களை அன்றே பூஜைக்குப் பயன்படுத்தி விட வேண்டும். சிலர் இரவில் பூ வாங்கி மறுநாள் காலை பூஜைக்கு பயன் படுத்துவார்கள். அதில் எந்தத் தவறும் இல்லை. தாமரைப் பூவை 5 நாட்கள் வரை வைத்துக் கூட பூஜிக்க லாம். அலரிப்பூக்களை 3 நாட்களுக் குள் பயன்படுத்தி விட வேண்டும். அதுபோல விஷ்ணு கிரந்தி பூவையும் மூன்று நாட்கள் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம். செண்பகம், சாமந்தி, மல்லி பூக்களை ஒரே நாளில் பயன்படு த்த வேண்டும்.

இறைவனுக்குப் படைக்கும் மலர், இலைகளில் துளசி, வில்வம் இரண்டு மட்டும் விதிவிலக்குப் பெற்றவை. விஷ் ணுவுக்கு மிக மிக பிடித்தமான துளசியை மூன்று மாதங்கள் வைத்திரு ந்து பயன்படுத்தலாம். சிவனுக்கு மிகவும் பிடித்தமான வில்வத்தை 6 மாதம் வரை கூட பயன்படுத்தலாம். வில்வ இலையை எத்தனை தடவை வேண்டுமானாலும் தண்ணீரில் சுத்தம் செய்து பயன்படுத்தலாம்.

சிவன் அதை ஏற்று அருள் புரிவார். வில் வத்துக்கு மட்டும் அந்தச் சிறப்பை சிவபெ ருமான் கொடுத்துள்ளார். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 832 பேர் மீண்டும் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து மேலும் 832 பயணிகள் நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவ டைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய 10 விமானங்களின் மூலமாக இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த இவர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக் காக அழைத்துச் செல்லப்பட்டனர். (நி-4)

## ஒரு நாளில் மட்டும் 11,700 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

(கொழும்பு)

நாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம் 11,700 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட் டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் இதனைத் தெரிவித்துள்ளது. (நி-4)

## பிள்ளையானுக்கும் தடுப்பூசி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் பாரா ளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையான்) நேற்று புதன்கிழமை கொவிட்-19 தடுப்பூசி ஏற்றப்பட்டது.

மட்டக்களப்பு வைத்திய அதிகாரிகள் பிரிவில் பாராளும ன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது. இதன் போதே பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனும் தடுப் பூசியைப் பெற்றுக் கொண்டார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 150 | 180 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 600 |
| தக்காளி | 230 | 250 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 40 |
| கோவா | 100 | 90 | 120 | 100 |
| கரட் | 160 | 200 | 200 | 200 |
| பூசணி | 100 | 120 | 130 | 120 |
| புடோல் | 160 | 200 | 200 | 120 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 120 | 140 |
| பாகற்காய் | 160 | 200 | 160 | 300 |
| வெண்டிக்காய் | 240 | 240 | 240 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 180 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 140 | 120 | 240 | 200 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 400 | 400 | 350 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 150 | 130 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 140 | 200 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 140 | 120 | 130 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 80-100 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 220 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 150 | 240 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 40 |
| வல்லாரை | 40 | 150 | 20 | 30 |
| ஈரப்பலா | 130 | 100 | 80 | 100 |

# வீட்டுத்திட்ட கொடுப்பனவை வழங்கக்கோரி ஆளுநர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

(நல்லூர்)

**வீட்டுத்திட்டத்துக்கான மீதிப் பணத்தினைப் பெற்றுத்தரு மாறு கோரி சண்டிலிப்பாய் - பெரியவிளான் மக்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலக முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் 3 ஆம் வட்டாரம் ஜே/153 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மக்களுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பொறுமதியிலான வீட்டுத்திட்டம் கடந்த அரசாங்கத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக வழங்கப்பட்டது.



படிப்படியாக வீட்டுத்திட்ட வேலைகள் முடிக்கும் பட்சத்தில் கட்டம் கட்டமாக பணம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அதன் பின்னர் எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

அதன் பின்னர் நிதி நிறுவனங்களிடம் கடன்பட்டு வீட்டு வேலைகள் செய்தும் முழுமையாக செய்து முடிக்க முடியவில்லை.

பெற்ற கடனைத் திரும்ப செலுத்த முடியாமலும் வீட்டை முழுமையாக்காமலும் நிர்க்கதியில் இருப்பதாகத் தெரிவித்த மக்கள் அவர்கள் வீட்டுத் திட்டத்துக்கான மிகுதிப் பணத்தை மிக விரைவில் பெற்றுத்தர ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (5-4-33-101)

## அரசியல் கருத்தரங்கு

(குப்பிழான்)

முன்னிலை சோசலிசக் கட்சியின் ஏற்பாட்டில் அரசாங்கத்திற்கு ஏன் முடியாமல் போனது? எனும் தலைப்பிலான அரசியல் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.நகரிலுள்ள றிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரத்னத்தின் பங்குபற்றுதலுடன் மேற்படி கருத்தரங்கு இடம்பெறும். (5-4-18)

## விழிப்புணர்வு

(கரணவாய்)

"அனைவருக்கும் தடுப்பூசி" எனும் எண்ணக்கருவில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கரவெட்டிப் பிரதேசத்தில் வீடு வீடாக விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் விசேட வேலைத்திட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இடம்பெற்று வருகிறது.

இதில் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-60)

# முல்லைத்தீவில் 570 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்ளப்படும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டியகுளம் ஆகிய இரு குளங்களின் கீழ் 570 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான கூட்டம் நேற்று முன்தினம் அம்பலப்பெருமாள் குளம் பொது நோக்கு மண்டபத்தில் துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.லதுமீரா தலைமையில் நடைபெற்றது.

அம்பலப்பெருமாள்குளத்தின் கீழ் 360 ஏக்கரிலும் கோட்டைகட்டியகுளத்தின் கீழ் 210 ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர் நெல் சந்தைப்படுத்தும் சபையிடம் 1,000 கிலோ நெல்லினை விற்பனை செய்யாத விவசாயிகளுக்கு எதிர்காலத்தில் மானிய உரம் கிடைக்காது என தெரிவித்தார்.

இதற்கு விவசாயிகள் அறுவடையின் போது தொடர்ச்சியாக மழை பெய்ததன் காரணமாக நெல்லினை உலர வைக்க முடியாத நிலைமை காணப்பட்டது.

தனியார் வியாபாரிகளே எமது கிராமங்களுக்கு வந்து நெற்கொள்வனவில் ஈடுபடுகின்றனர்.

எமது உணவுத் தேவைக்குக் கூட தற்போது எங்களிடம் நெல் இல்லை எனவும் இம்முறை காலபோகத்தில் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை எனவும் தொடர்ச்சியான மழை இதற்கான காரணமாக அமைந்து விட்டது எனவும் மிகக் குறைந்த அளவில் அறுவடை செய்யப்பட்ட நெல்லினையும் ஈரத்துடன் தனியார் வியாபாரிகளுக்கே விற்பனை செய்ததாகவும் பிரதேச செயலாளரிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஷ், துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி, துணுக்காய் காணி உத்தியோகத்தர் எஸ்.ராஜ்குமார் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.(5-4-350)

# சமூக சேவைகள் பணிப்பாளராக சோதிநாதன் நியமனம்

(குப்பிழான்)



வேலணைப் பிரதேச செயலாளராக பணியாற்றிய அ.சோதிநாதன் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளராக நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்றுப் புதன்கிழமை அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த காலங்களில் சங்கானை மற்றும் வேலணைப் பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராக கடமையாற்றிய சோதிநாதன் சிறந்த நிர்வாக ஆளுமையுடையவர்.

இவர் இறுதியாக வேலணைப் பிரதேச செயலாளராக கடமையாற்றினார். அண்மையில் நிலையில் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றப்பட்ட நிலையில் தற்போது வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளராக நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-4-18)

# 4 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து காயமடைந்தவர் வைத்தியசாலையில்

(குருமன்காடு)

வவுனியா கண்டி வீதியில் வன்னி இராணுவ தலைமையகத்திற்கு அருகே நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்துச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து கண்டி வீதியூடாக தென்பகுதி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று திரும்ப முற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் வீதியின் திரும்புவதினை அவதானித்த பின்னால் வந்த ஹயஸ் வாகனமும் பாரவூர்தியும் தரித்து நின்றன.

இதன்போது பாரவூர்தியின் பின்னால் வந்த பட்டா ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டையிழந்து பாரவூர்த்தியின் பின்பகுதியில் மோதியதுடன் பாரவூர்த்தி சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து ஹயஸ் வாகனத்துடன் மோதுண்டதுடன் ஹயஸ் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துச் சம்பவம் நேர்ந்துள்ளது.

இவ்விபத்தில் பட்டா ரக வாகனம், பாரவூர்தி, ஹயஸ், மோட்டார் சைக்கிள் ஆகிய நான்கு வாகனங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இவ்விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)

# எதிரெதிரே வந்த மோ.சைக்கிள்கள் மோதி விபத்து

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் எதிரெதிரே வந்த மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்து நேற்று புதன்கிழமை காலை இடம் பெற்றது.

விபத்துத் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

முல்லைத்தீவு மல்லிகைத்தீவு பகுதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை நபர் ஒருவர் வழிமறித்து உதவிகோரி ஏறிச் சென்ற வேளை கேப்பாபிலவுப் பகுதியில் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் ஏறி வந்த 35 வயதான நபர் படுகாயமடைந்தார்.

குறித்த நபரை ஏற்றி வந்தவர் விபத்துக்குள்ளானவரை வீதியில் விட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

காயமடைந்தவர் அப்பிரதேச மக்களால் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை மாஞ்சோலை வைத்தியசாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(4)

விண்ணப்பங்களை மறுப்பது என்பது மனித இயல்பு. முடிந்தவரை அவற்றைப் பரிசீலித்து உதவுவது மனிதப் பண்பு.பண்பு என்பது பக்குவத்தின் விளைவு.

– லேனா தமிழ்வாணன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளிநாட்டுத் தூதுவர்களின் யாழ். வருகை எங்கள் அவலத்தை தெளிவுபடுத்துவோம்

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடர் எதிர்வரும் வரும் மார்ச் மாதம் நடைபெற இருக்கின்ற இவ்வேளையில், வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரக்கூடிய வாய்ப்புகள் உள்ளதென்பதை உணர முடிகின்றது.

இதனை உறுதி செய்வது போல இலங்கைக்கான சுவிற்சலாந்து நாட்டுத் தூதுவரின் யாழ்ப்பாண வருகை அமைந்துள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தொடர் நடைபெற இருக்கின்ற இவ்வேளையில்,

சுவிஸ் நாட்டுத் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து சமயத் தலைவர்களையும் தமிழ் அரசியல் தரப்புகளையும் சந்திப்பதானது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

அதிலும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழ் மக்களின் பேரெழுச்சி கொண்ட பேரணி நடந்து முடிந்த கையோடு,

வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதானது, தமிழ் மக்களின் மனநிலை எவ்வாறாக உள்ளதென்பதை அறிவதற்கானது என அனுமானிக்கலாம்.

ஆக, யாழ்ப்பாணத்துக்கு வருகை தரு கின்ற வெளிநாட்டுத் தூதுவர்களிடம் எமது அவலத்தை தெளிவாக எடுத்துரைப்பது இங்கு மிக மிக அவசியமானதாகும்.

கடந்த காலங்களில் வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாட்டுப் பிரதமர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த போதிலும் அவர்களை நாம் சரியான முறையில் அணுகவில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆகவே யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம்; தமிழ் மக்கள் இந்த நாட்டில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தெளிவுபடுத்த வேண்டும்.

அதிலும் முதன்மையான விடயம் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட இன அழிப்பு விவகாரமும் தமிழர் தாயகத்தில் நடக்கின்ற நில அபகரிப்புகள் என்பவற்றுடன், இவற்றுக்கு மேலாக இந்த நாட்டில் தமிழ் மக்கள் உரிமையுடன் – சுதந்திரமாக வாழ்வதற்கான அரசியல் தீர்வின் அவசியம் என வகைமைப்படுத்தி தெளிவுபடுத்துவது பொருத்தப்பாடானதாகும்.

இதைவிடுத்து சட்டவிரோத மண் அகழ்வு, போதைவஸ்து கடத்தல் என்றவாறு பிரச்சினைகளை பட்டியல்படுத்துவோமாயின்,

அஃது இங்கு வருகை தந்த வெளிநாட்டுத் தூதுவர்களிடம் முரண்பாடான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற வெளிநாட்டுத் தூதுவர்களை எம்மில் யார் சந்தித்தாலும் அவர்கள் அனைவரும் தீர்வு காணப்பட வேண்டிய முதன்மைப் பிரச்சினையை முன்னுரிமைப்படுத்துவது கட்டாயமானதாகும்.

# பால்மா இறக்குமதி நான்கு ஆண்டுகளில் நிறுத்தப்படும்

(கொழும்பு)

பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த அடுத்த 4 ஆண்டுகளில் பால்மாக்களின் இறக்குமதி நிறுத்தப்படும் என விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அதன்படி ஒரு நாளைக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள பால்மா இறக்குமதி நிறுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் கால்நடை வளர்ப்பிற்கு என 1.5 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஆகவே அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் கறவைப் பசுக்களின் எண்ணிக்கை 5.இலட்சம் ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என மகிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.

அதேநேரம் பச்சை பயறு, எள் மற்றும் கௌப்பி இறக்குமதி ஏற்கனவே நிறுத்தப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# விரைவில் மீண்டுமொரு தாக்குதல் எச்சரிக்கின்றார் ஞானசார தேரர்

(கொழும்பு)

இலங்கையில் மற்றுமொரு தாக்குதல் சம்பவம் இடம்பெற வாய்ப்புகள் உள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

இதன் போது கருத்து வெளியிட்ட அவர், அடிப்படைவாத கருத்துக்களால் ஆயுதம் தரித்த குழுக்கள் இதுவரை செயலற்றதாக்கப்படவில்லை.

இதனால் நாட்டில் மீண்டுமொரு தாக்குதல் இடம்பெறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கைதான பிரதான சூத்திரதாரிகள் இன்றும் வெளியில் இருக்கின்றனர் . இந் நிலையில் , உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆணைக் குழுவால் எமக்கும் வழக்கு தொடரப் போவதாக அண்மையில் பிரதான பத்திரிகையொன்றில் செய்தி வெளியாகியிருந்தது என அவர் தெரிவித்தார். (நி-4)

# தொற்று அதிகரிக்கும் நிலையில் பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுப்பு

(மன்னார்)

நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 14 கொரோனாத் தொற்றாளர்காள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் குறித்த தொற்றாளர்களுடன் நெருங்கிய உறவுகளை பேணிய நபர்களுக்கும் மற்றும் நானாட்டான் பிரதேச செயலகம், பிரதேச சபை ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி வி.ஆர்.சி. லெம்பேட் தலைமையில் நேற்றுக்காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

கடந்த வாரம் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான பரிசோதனைகளின் போது கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களோடு தொடர்புகளை கொண்டிருந்த நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இதுவரை நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதில் நால்வர் மாத்திரமே நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் வசிப்பவராகவும் ஏனையவர்கள் வெளிப் பகுதிகளைச் சார்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனா்.


அதன் அடிப்படையில் நேற்று சுமார் 108 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-285)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** நயினாதீவு தபாலக வீதி. நயினாதீவு முருகன் கோவில் வீதி. நயினாதீவு பிரதான வீதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சத்திய தரிசனம்



## எளிமையாகச் சாப்பிடுங்க

- மௌனம் உன்னதமானது. அறவே பேச்சை நிறுத்தி விட்டு எண்ண ஓட்டத்தை உள்ளே திருப்புங்கள்
- அமைதியை வெளியே தேடாதீர்கள். அது நமக்குள்ளே தான் இருக்கிறது.
- நல்ல விடயங்கள் விலை மதிப்பில்லாதது. அதனால், அதைப் பின் பற்றுபவர்களும் எண்ணிக்கையில் மிகக் குறைவாகத்தான் இருப் பார்கள்.
- எளிய உணவைச் சாப்பிடுங்கள். உடலும் உள்ளமும் உங்களின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கத் தொடங்கும்.
- கல்லிலே கடவுளைக் காணவேண்டுமே ஒழிய, கடவுளைக் கல்லாக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது.
- ஆன்மிக வாழ்வில் இலக்கை அடைய வேண்டும் எனில், சரியான சாஸ்திர அறிவும், சாதனை வழிகளும் மிகவும் அவசியம்.
- நல்லொழுக்கம், நல்ல செயல், நற்சாட்சியே கடவுள் நெறி.
- கடந்த கால நினைவுகளை சுமந்து கொண்டு திரியாதீர்கள். அவை உங்களை அழுத்தி இன்றைய முன்னேற்றத்தை தடுத்து நிறுத்திவிடும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2021-13.03.2021



துலாம் இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் பகை கிரகமான குருவுடன் கூடியிருக்கின்றார். அதே நேரத்தில் அர்த்தாஷ்டம சனி, அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கமும் இருக்கிறது. எனவே ஆரோக்கியத்திலும், அன்றாட வாழ்க்கையிலும் கவனம் தேவை.

**கூட்டுக்கிரகச் சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் குரு, சனி, புதன், சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது எதையும் திருப்தியாகச் செய்ய இயலாது. திட்டமிட்ட காரியங்களில் திடீர், திடீரென மாற்றங்களை செய்வீர்கள். இடம் வாங்கும் பொழுது பத்திரப் பதிவில் கவனம் தேவை. வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். எதையும் நிதானித்துச் செய்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு கூடும்.

**மகர புதனும், கும்ப புதனும்**

மாதத் தொடக்கத்தில் புதன் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். இம்மாதம் 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். எனவே அவரது வக்கிர காலத்தில் உங்களுக்கு நற்பலன்கள் நிறைய நடைபெறும். பாகப்பிரிவினை சம்பந்தமாக எடுத்த பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடியும். சுக்கிரனோடு புதன் இணைந்திருப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். மார்ச் 7 ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். எனவே பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம்.

## ஆரோக்கியத்திலும் அன்றாட வாழ்க்கையிலும் கவனம் தேவை

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் இம்மாதம் 18. ஆம் திகதி அஷ்டமத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே ஆரோக்கியத்தில் தொல்லை அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. ஊர்மாற்றங்கள், இடமாற்றங்கள் பற்றிச் சிந்திப்பீர்கள். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்றுச் சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மை தான். சனியோடு இணைந்து நீச்ச பங்க இராஜயோக அமைப்பிலும் விளங்குகின்றார். அதே நேரத்தில் இம்மாதம் 21 ஆம் திகதி குரு அஸ்தமன நிவர்த்தியாவதால் அதன்பிறகு ஆரோக்கியத் தொல்லை அகலும். தாயின் உடல் நலம் சீராகும். ஒரு சிலர் வீட்டை விரிவு செய்து கட்டுவர். அரசு வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு அது கிடைக்கலாம்.




**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

மாதத் தொடக்கத் தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், இம்மாதம் 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். இந்தக்காலத்தில் பெண் பிள்ளைகளின் திருமண முயற்சி கைகூடும். பூர்வீக சொத்துக்களைப் பங்கிட்டுக் கொள்வதில் இருந்த பிரச்சினை அகலும்.

தொழில் முயற்சியில் தொல்லை தந்தவர்கள் விலகுவர். கடன் பிரச்சினையில் சிக்கியிருந்தவர்களுக்கு இப்பொழுது நிவாரணம் கிடைக்கும். கட்டடத் திறப்பு விழாக்கள், கடைதிறப்பு விழாக்களையும் அமைக்கும் நேரமிது. இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் எதிலும் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. விரயங்கள் கூடுதலாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். தாய் மற்றும் உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. கேட்ட சலுகைகளும் மறுக்கப்படலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விருச்சிக இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் மேஷ இராசியில் தன் சொந்த வீட்டில் பலம் பெற்றிருக்கின்றார். தன பஞ்சமாதிபதியான குரு பகவான் நீச்ச பங்க ராஜயோகத்தை உருவாக்குகின்றார். எனவே நினைத்தது நிறைவேறும்.

**கூட்டுக்கிரக சேர்க்கை**

உங்கள் இராசிக்கு 3ஆம் இடமான சகாய ஸ்தானத்தில் குரு, சனி, புதன், சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. வெற்றிகள் ஸ்தானத்தில் குவிந்திருக்கும் இந்த கிரகங்களின் ஆதிக்கத்தால் சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாகவே இருக்கும். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் தானாகவே வந்து சேரும். வீடு கட்டும் யோகம் அல்லது வீடு வாங்கும் யோகம் உண்டு. உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

**மகர புதனும் கும்ப புதனும்**

மாதத் தொடக்கத்தில் புதன் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். இம்மாதம் 14ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். இதன் விளைவாக எதிர்பார்த்த நற்பலன்கள் எளிதில் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக்கொண்டு விருப்ப ஓய்வில் வெளிவந்து 'சுயதொழில் தொடங்கலாமா?' என்றுகூடச் சிந்திப்பர். மார்ச். 7 ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் செல்வதால் அதன்பிறகு

## நினைத்தது நிறைவேறும்

தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வரலாம்.

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கும், 6ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் செவ்வாய். அவர் இம்மாதம் 18 ஆம் திகதி சப்தம ஸ்தானத்திற்கு வருகின்றார். இராசிநாதன் செவ்வாய் இராசியைப் பார்க்கும் பொழுது யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். என்றைக்கோ குறைந்த விலையில் வாங்கிப் போட்ட இடம், இப்பொழுது அதிக விலைக்கு விற்று இலாபத்தைக் கொடுக்கும். தொழில் ரீதியாக நீங்கள் எடுத்த முயற்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




**மகர குருவின் சஞ்சாரம்**

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்று சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மைதான். சனியோடு இணைந்து நீச்ச பங்க ராஜயோக அமைப்பிலும் விளங்குகின்றார். அதே நேரத்தில் இம்மாதம் 21 ஆம் திகதி குரு அஸ்தமன நிவர்த்தியாவதால் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து தொழில் மேம்பாட்டிற்கு வழிவகுப்பர். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது உடல்நலம் சீராகும். கடன் சுமை குறையும். கடைதிறப்பு விழாக்களும், கட்டடத் திறப்பு விழாக்களும் கண்டு மகிழும் நேரமிது. தாயின் உடல்நலம் சீராகும். இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபடுவதோடு, சிவபெருமான் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும், புகழும் கூடும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்வி, கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பெற்றோர்களின் உதவியும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வும் சலுகைகளும் உண்டு. வாகனம் வாங்கும் யோகத்தால் மகிழ்ச்சி கூடும். முன்னோர் வழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

(தொடரும்...)

## பெரியதம்பனை...

பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு தற்கொலை அங்கிகள் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக கொழும்பில் இருந்து செட்டிகுளம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலிற்கமைய குறித்த பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட இரண்டு தற்கொலை அங்கிகளை மீட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-3,299)

## யாழ்.பல்கலை...

துவபீட ஆய்வுகூடங்களில் நேற்றுப் புதன்கிழமை 938 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

அவர்களில் வடக்கு மாகாணத்தில் நான்கு பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, கிளிநொச்சியில் மூன்று பேருக்கும் கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் கல்வி கற்கும் கேகாலையைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,316)


**மெகா பவர்**

திகதி 17/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0768
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
T 19 01 03 64 74

**மஹஜன சம்பத**

திகதி 2021/02/17
சீட்டிழுப்பு இலக்கம் 4401
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
K 6 4 7 3 9 3
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 17.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2696
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
N 05 06 23 65
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**

திகதி - 2021.02.17
சீட்டிழுப்பு இலக்கம் - 438
R 04 13 47 70
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

**ஜாதிக சம்பத**

சீட்டிழுப்பு திகதி 17/02/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1097
வெற்றி இலக்கங்கள்
7 4 5 0 8 9
தேசிய லொத்தர் சபை


## சிறுபான்மையின...

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபேர்கலரை நேற்று விக்னேஸ்வரன் சந்தித்து பேசினார்.

இதன்போதே மேற்படி கருத்தை தெரிவித்தார்.

இது குறித்து சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபேர்கலருடன் அரசியல் தொடர்பு அதிகாரி சிடோனியா கேபிரியல் அத்துடன் நிகழ்ச்சிகள் இணைப்பாளர் சுசந்தி கோபாலகிருஷ்ணன் ஆகிய மூவரும் என்னை வந்து சந்தித்தார்கள்.

எங்களுடைய சரித்திரம் பற்றியும் தற்கால பிரச்சினைகள் பற்றியும் பல கேள்விகளை அவர் கேட்டிருந்தார்.

சிறுபான்மையினர் அனைவருக்கும் எதிராக சிங்கள பௌத்தம் என்ற ஆயுதத்தை ஓய்வுபெற்ற இராணுவத்தினருடனும் சேவையில் இருக்கும் படையணியினருடனும் சேர்ந்து பிரயோகிக்கும் போது பாதிப்புறும் சகல மக்களும் ஒன்றிணைகின்றார்கள்.

தற்போதைய ஐக்கியம் அரசாங்கத்தின் பிழையான செயற்பாடுகளால் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவர்களின் பிழையான செயற்பாடு தொடரும் வரையில் வடக்கும் கிழக்கும் மலையகமும் சேரும். தமிழரும் முஸ்லிம்களும் சேர்வர். வடக்கும் கிழக்கும் இணையும்.

ஆகவே அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலேதான் எமது ஐக்கியம் தங்கியிருக்கின்றது என்றேன்.

தமிழ் மக்களின் பாரம்பரியம் பற்றியும் சிங்கள பௌத்த மயமாக்குதல் பற்றியும் பல விடயங்களை நாங்கள் பேசிக் கொண்டோம். திரும்பவும் வந்து சந்திப்பதாக கூறி அவர்கள் விடைபெற்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வெற்றிலை...

விழுந்த மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தசாமி ஞானேஸ்வரி (வயது-75) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 12ஆம் திகதி வேம்பிராய் பகுதியிலுள்ள மரணச் சடங்குக்கு தனது மருமகனுடன் துவிச்சக்கரவண்டியில் சென்றுள்ளார்.

இதன்போது வெற்றிலை துப்புவதற்காக முன்பக்கம் குனிந்தபோது துவிச்சக்கரவண்டியில் இருந்து விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் குறித்த மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## காரைநகரில்...

காக மேற்கொள்ளப்படவிருந்த அளவீட்டுப் பணிகள் நேற்றுப் புதன்கிழமை தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மற்றும் பொது மக்களின் கடும் எதிர்ப்பினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

காரைநகர் இந்துக் கல்லூரிக்குச் சொந்தமான 2 பரப்புக் காணி மற்றும் பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள் உட்பட 8 பரப்பைக் கடற்படையின் எலார கடற்படைத்தளம் அமைப்பதற்காக சுவீகரிக்க கடற்படையினர் நடவடிக்கை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை குறித்த காணிகளை அளவீடு செய்வதற்கு நிலஅளவைத் திணைக்கள அதிகாரிகள் முயற்சித்தனர்.

எனினும், பொதுமக்கள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். இதனையடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.(ம-3,18,33)

## கொரோனா..

நேற்று உறுதிப்படுத்தினர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 422 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் நேற்றும் +722 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ம-3)

## இந்து மதத்..

ஃபேர்கலர் இந்து மதத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தலைவர் பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சுவிஸ் நாட்டு அரசாங்கம் கட்டாயம் முயற்சி செய்ய வேண்டும் எனவும் ஐ.நாவில் சுவிஸ் அரசாங்கமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுக்கான வழியை ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் இந்து மதத் தலைவர்களால் சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-3)

## கிணற்...

கிணற்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொல்புரம் கிழக்கு சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி ஸ்ரீரஞ்சன் (வயது-46) என்பரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஊரெழு மேற்குப் பகுதியிலுள்ள வாகனம் திருத்தும் இடத்தில் வேலை செய்து வரும் குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் மதியம் சாப்பிட்ட பின்பு கிணற்றுக் கட்டில் ஓய்வெடுத்துள்ளார்.

இதன்போது வலிப்பினால் கிணற்றுக்குள் தவறுதலாக விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## தமிழரின்..

விக்னேஸ்வரனிடம் இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் கேள்வி எழுப்பினார்.

சுவிற்சர்லாந்து தூதுவரும் நீதியரசர் விக்னேஸ்வரனும் நேற்று யாழில் சந்தித்து கலந்துரையாடியபோதே தூதுவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதற்குப்பதில்வழங்கிய விக்னேஸ்வரன், 2004 டிசம்பர் மாதத்தில் சுனாமி வந்த போது உக்கிரமாகப் போரில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் மனிதாபிமான முறையில் ஒன்றுசேர்ந்து உதவி செய்தார்கள்.

அதேபோன்று இன்று தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், கத்தோலிக்கர்கள் போன்ற அனைவரும் இன்றைய ஜனாதிபதியின் தவறான முடிவுகளால் ஒன்றிணைகிறார்கள். அவர்களின் பிழையான செயற்பாடு தொடரும் வரையில் வடக்கும் கிழக்கும் மலையகமும் ஒன்றுசேரும். அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலேதான் எமது ஐக்கியம் தங்கியிருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன். (ம-3)


**ශනි** / **சனி**

சீட்டிழுப்பு வாரம் 053
சீட்டிழுப்பு திகதி 17.02.2021
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள்
12 30 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,620,680/=
அபிவிருத்தி லொத்தர் சபை

**அத கோடிபதி** ADA KOTIPATHI

தினம் : புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1197
வர்ணம் : இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 17.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 109,150,855
வெற்றி இலக்கங்கள்
44 60 66 74
ஆங்கில எழுத்து E
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா** Shanida

தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3527
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 17.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,196,544
வெற்றி இலக்கங்கள்
19 22 51 63
ஆங்கில எழுத்து H
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி**

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி : 17.02.2021
வெற்றி வாரம் : 3078
வர்ணம் : பச்சை
வெற்றி இலக்கங்கள்
03 10 29 30
மகரம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,984,120

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 1371
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 17/02/2021
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
K 38 49 50 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் 69,418,674/=
அபிவிருத்தி லொத்தர் சபை

**ජයෝදා** ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1734
சீட்டிழுப்பு திகதி 17.02.2021
வெற்றி இலக்கங்கள்
03 43 55 60
ஆங்கில எழுத்து N
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 21,913,740
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## INFORMATION TECHNOLOGY PARK

*Jaffna, Srilanka*
*Under the purview of the*
*Ministry of Technology*

MPCS Building Office :- 021 222 3641
127,K.k.S.Road, Jaffna, Srilanka Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**JANUARY BATCH**

- *Dip.in Microsoft Office*
- *Dip.in Desktop publishing*
- *Dip.in Information Technology*
- *Dip.in Computer Programming*

**Online Course**

- *Dip.in PC Application & Office Management*

**Languages**

- *VB.net* - *PHP* - *C/C++*
- *C#* - *Java* - *AotoCAD*

**Workshops**

- *Internet & e-mail*
- *Webpage Designing & Development*

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம் (C-1448)

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 25.02.2021
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 27.02.2021

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*
- Executive Officer -

## கணனி திருத்தம்

**I Phone, Android Phone களும் திருத்திக் கொடுக்கப்படும்.**

உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம். கணனிகள் விற்றல், வாங்குதல், பழைய கணனிகளும் வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு : (C-9780)
**NPO Computer System - 077 243 8537**

## வேலை வாய்ப்பு

யாழ். வடமராட்சியில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு ரைப்செற்றிங் செய்யக்கூடியவர்கள் தேவை.
**( பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது. )** (C-1461)

**☎-077 832 9477**

## விசேட விலையில் மடிக்கணனி

**HP i3**

- Laptop
- 4GB Ram
- 1 TB HDD
- Windows 10



(C-1458) **Free Bag** கையிருப்பு உள்ளவரை

**St. Antonys Computer**
189, K.K.S Road, Jaffna Town, Jaffna.
**021 222 4865 | 075 069 8608**

## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும். (5693)

முன்பதிவுக்கு: **076 682 7368**
கச்சேரியடி, யாழ்ப்பாணம்

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (5812)

தொடர்பு: **076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)**

## வேலையாட்கள் தேவை

யூஸ் கம்பனி ஒன்றுக்கு பெண் வேலையாட்கள் தேவை. (5816)

**077 779 3787**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயதான சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. (C-1464)

**077 357 5251**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-1000/=Kg**

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் **1150/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1418)

**☎ 0768226240** DHL

## அண்ணா

EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

**3-6** நாட்கள்

**லண்டன் 1000/=** (C-1374)

**070 3305500**
**075 3305500**

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| சங்கானை<br>ஆவரங்கால்<br>நெல்லியடி<br>சங்கத்தானை | பளை<br>கிளிநொச்சி<br>புதுக்குடியிருப்பு<br>முல்லை | மல்லாவி<br>மன்னார்<br>வவுனியா<br>கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## விளம்பரப் பலகைகளுக்கு...

**ANDRA** வின்

# அதிரடி விலைக் குறைப்பு

**3 வருட உத்தரவாதம்** (C-1453)

| | | |
|---|---|---|
| டிஜிட்டல் விளம்பர பலகை | 220/- | (சதுர அடி) |
| டிஜிட்டல் விளம்பர பலகை (ஒளியூட்டப்பட்டது) | 590/- | (சதுர அடி) |
| டிஜிட்டல் பனர் | 45/- | (சதுர அடி) |
| 3D Embossed விளம்பரப்பலகை | 1950/- | (சதுர அடி) |

(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

தற்பொழுது புதிதாக அறிமுகபடுத்தப்பட்டுள்ள மின்சாரத்தை சிக்கனப்படுத்தக்கூடிய முற்றிலும் **LED Light** களினாலான விளம்பரப்பலகைகளை எம்மிடம் உத்தவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

இல.379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு: 077 748 1696 / 077 220 9527**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.